ISSN 1391-9504

# விஜய்

Vijey விජය

23.04.2014 - மலர் 11, இதழ் 08



## இமயத்தில் இளஞ் சிவப்பு உப்பு கண்டுபிடிப்பு

PUBLIC LIBRARY
JAFFNA



## உலகமே அதிசயிக்கும் சீனப் பெருஞ்சுவர்!



## மலையகத்தில் அமைந்துள்ள 'ஹோட்டன்' சமவெளி

விலை
ரூபா 15/-



## கற்காலமும் பனியுகமும்

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01. படத்தில் காணப்படுபவர் ஏன் குடை பிடித்திருக்கிறார்?

1. வெயில் காரணமாக
2. வண்ணத்துப்பூச்சிகள் பறப்பதன் காரணமாக
3. மழை காரணமாக

02. இங்குள்ள ஆங்கிலச் சொல் யாது?

..........................................

03. எத்தனை வண்ணத்துப் பூச்சிகள் பறந்து கொண்டிருக்கின்றன?

1. நான்கு
2. மூன்று
3. ஐந்து

04. 'பூக்கள் மலர்ந்துள்ளன' என்பதை ஒருமையில் தருக.

..........................................

01. படத்தில் காணப்படும் விலங்குகள் எவை?

..........................................

02. பால் தரும் விலங்கு எது?

..........................................



03. இங்குள்ள விலங்குகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.

04. 'சூரியகாந்திப் பூ' என்பதற்கான ஆங்கிலச் சொல் யாது?

..........................................

01. இங்கு வெட்டப்படாத அப்பிள்கள் எத்தனை உள்ளன?


..........................................

02. வெட்டப்பட்ட அப்பிள் பாதிகள் எத்தனை உள்ளன?

..........................................

03. நாம் சந்தையில் பொதுவாகக் காணக்கூடிய அப்பிள்களின் நிறங்கள் யாவை?

1. சிவப்பு, நீலம்
2. சிவப்பு, பச்சை
3. சிவப்பு, ஊதா



04. படத்தில் என்னென்ன நிறங்களில் அப்பிள்கள் உள்ளன?

1. சிவப்பு, நீலம், பச்சை, இளஞ்சிவப்பு, மஞ்சள்
2. சிவப்பு, நீலம், ஊதா, பச்சை, மஞ்சள், செம்மஞ்சள்
3. சிவப்பு, நீலம், பச்சை, செம்மஞ்சள், மஞ்சள், இளஞ்சிவப்பு, ஊதா






01. இந்தப் படம் குறிக்கும் இலக்கம் யாது?

..........................................

02. இங்கு எத்தனை பறவைகளும் மீன்களும் உள்ளன?

பறவைகள் - ..........................

மீன்கள் - ..........................

03. மீன்கள் வசிப்பது;

1. நிலத்தில்
2. வயலில்
3. நீரில்

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியின் சுழற்சியே அனைத்திற்கும் காரணம்!

அதிகாலையில் பொழுது புலரும்போது, ஏற்படும் இதமான உணர்வு, பகலாகும்போது மாறி விடுகின்றது. பகலின் வெப்பம் எம்மை பாடாய்ப்படுத்தி விடுகின்றது. பின்னர், மெல்ல மெல்ல இருள் சூழும்போது, உடலுக்கு இதமான உணர்வு ஏற்படுகின்றது. பகல் பொழுதில் சூரிய ஒளி தரையில் விழுவதால் வெப்பமான சூழல் உணரப்படுகின்றது. சூரிய ஒளி பூமியில் பதியும் கால அளவுகள் வேறுபடுவதால், வெப்பநிலையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் நிகழக் காரணமாக அமைவது பூமியின் சுழற்சியே ஆகும். ஆகவே, பூமி சுழல்வதால் நாம் பல்வேறு மாற்றங்களை எதிர்கொள்கின்றோம்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk






## தன்னைத் தானே ஒரு முறை சுற்றுவதற்கு...

பூமி தனது அச்சில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியே சுழல்கின்றது. இவ்வாறு பூமி தன்னைத் தானே ஒருமுறை சுற்றுவதற்கு 23 மணித்தியாலங்களும் 56 நிமிடங்களும் 4 வினாடிகளும் தேவைப்படுகின்றன. இதுவே, பூமி தன்னைத் தானே சுற்ற 24 மணித்தியாலங்கள் தேவை என பொதுவாகக் கூறப்படுகின்றது. பூமி இவ்வாறு தன்னைத்தானே ஒருமுறை சுற்றி வருவதே '(ஒரு) நாள்' எனக் கணிப்பிடப்படுகின்றது.


## பருவகால மாற்றங்கள்

பூமி தனது அச்சில் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றதாலேயே (புவிச் சுற்றுகை) உலகில் பருவகால மாற்றங்கள் ஏற்படுகின்றன. பூமி தனது அச்சில் சற்று சரிவாக அமைந்துள்ளதால், அனைத்து இடங்களுக்கும் ஒரே விதமாக சூரிய ஒளி கிடைப்பதில்லை. சூரிய ஒளி பதியும் விதத்தில் ஏற்படும் மாறுபாடுகளின் அடிப்படையிலேயே நாடுகளில் பருவகால மாற்றங்களைக் காண முடியும். அந்த வகையில் பூமியின் வட அரைக்கோளப் பகுதியிலும் தென் அரைக்கோளப் பகுதியிலும் ஓர் ஆண்டின் வெவ்வேறு காலப்பகுதிகளிலேயே வெவ்வேறு பருவகாலங்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறு ஏற்படும் பருவ காலங்கள் 4 வகைப்படும். குளிர்காலம், கோடைகாலம், இலையுதிர்காலம், இளவேனில்காலம் என்று பருவகாலங்களை வேறுபடுத்தலாம். குளிர்காலத்தில் அதிகம் குளிர் நிலவும். இதன்போது பனி கொட்டும். கோடைகாலத்தில் அதிக வெப்பம் நிலவும். தாவரங்கள் வளர்ச்சியடையத் தொடங்கும்.



இலையுதிர் காலத்தில் வெப்பம் படிப்படியாகத் தணிந்து மரங்களின் இலைகள் உதிரத் தொடங்கும். இளவேனில் காலத்தில் வெப்பம் படிப்படியாக அதிகரிக்கும். மரங்கள் தளிர்த்து பூக்கத் தொடங்கும்.




## நேரம், நாள் மாறுபடல்

இலங்கையில் விடியும்போது அவுஸ்திரேலியாவில் இரவாகின்றது. அதுவே, வட அமெரிக்காவில் பகல் பொழுதாகிவிடுகின்றது. இவ்வாறு தான் உலகில் நேர மாற்றங்கள் நிகழ்கின்றன. நேரக் கணிப்பீட்டில் நெட்டாங்குகளே செல்வாக்குச் செலுத்துகின்றன. புவிச் சுழற்சியானது, மேற்கிலிருந்து கிழக்காக இடம்பெறுவதால், கிழக்கு நெட்டாங்குகளில் அமைந்துள்ள நாடுகளிலேயே முதலில் சூரியன் உதயமாகும். $0^{\circ}$ கிறீன்விச் நெட்டாங்கிலிருந்து கிழக்காக $180^{\circ}$ வரையும் மேற்காக $180^{\circ}$ வரையும் இந்த நெட்டாங்குகள் அமைந்துள்ளன. கிறீன்விச் நெட்டாங்கில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும்போது நேரம் அதிகரிப்பதோடு, மேற்கு நோக்கிச் செல்லும்போது நேரம் குறைவடையும். இவ்வாறு தான் நேர மாற்றம் நிகழும். நேர மாற்றம் நிகழ்வது போன்றே நாள் மாற்றமும் நடைபெறுகின்றது.

## இரவு-பகல்



ஆபிரிக்கா கண்டத்தில் ஒரு பகுதியில் இரவும், மற்றொரு பகுதியில் பகலும் நிலவுகின்றதைக் காட்டும் செய்மதிப் படம்.

பூமி சுழல்வதன் மற்றொரு விளைவு இரவு-பகல் நிலவுவதாகும். சூரியன் இருக்கும் திசையை பூமி நோக்கும்போது அப்பகுதி பகலாகவும் மறுபக்கம் இரவாகவும் இருக்கும். பகல் பொழுது நிலவும் பகுதிகள் படிப்படியாக இருளைப் பெறும்போது, இருள் நிலவிய பகுதிகள் படிப்படியாக பகல் பொழுதைப் பெறும். துருவப்பகுதிகளில் அமைந்துள்ள ஒரு சில நாடுகளில் வருடத்தின் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மாத்திரம் மிகக் குறுகிய பகல் பொழுது நிலவும்.




## வற்று-பெருக்கு

சந்திரனதும் சூரியனதும் ஈர்ப்புச் சக்தி காரணமாக வற்று-பெருக்கு என்பன ஏற்படுகின்றன. இவற்றின்போது சமுத்திர நீர் மட்டம் வேறுபாடு அடைகின்றது. நாளொன்றுக்கு இரு தடவைகள் இவ்வாறு நடைபெறுகின்றன. சந்திரனின் செல்வாக்கு காரணமாகவே இவ்வாறு நிகழ்கின்றது. சமுத்திர நீர் மட்டம் உயர்வடைவது 'பெருக்கு' என்றும் சமுத்திர நீர்மட்டம் குறைவது 'வற்று' என்றும் அழைக்கப்படுகின்றது.




(-இ)

PUBLIC LIBRARY JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவரும் ஒருவரே!

ரோமாபுரியில் பிரபல இளம் ஓவியர் ஒருவர் இருந்தார். அவர் எதை வரைந்தாலும் தத்ரூபமாக வரைவார். ஒருநாள் அவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை ஓவியமாக வரையலாம் என்று முடிவு செய்தார். ஒவ்வொரு நிகழ்ச்சியும் தத்ரூபமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு ஓவியத்தையும் அதற்குப் பொருத்தமான மாதிரியை வைத்தே ஓவியங்களை வரைந்தார்.

ஒருமுறை குழந்தை இயேசுவை ஓவியமாக வரைய அழகான, களங்கமில்லாத, தெய்வீக அம்சம் பொருந்திய குழந்தையைத் தேடி பல இடங்களுக்கும் சென்று அலைந்து திரிந்தார். முடிவில் ஒரு கிராமத்தில் ஒரு நடுத்தர குடும்பத்தில் அவர் எதிர்பார்ப்புக்குப் பொருத்தமான குழந்தை ஒன்று கிடைத்தது. அந்த குழந்தையின் பெற்றோரிடம் தன் எண்ணத்தைக் கூறி, அக்குழந்தையை மாதிரியாக வைத்து குழந்தை இயேசுவின் ஓவியத்தை சிறப்பாக வரைந்து முடித்தார்.



குழந்தை இயேசுவை வரைந்த பின்னர் அக்குழந்தையானது, பிற்காலத்தில் மிகப் பெரிய பதவிகளை அடையும் என்று ஆசிர்வாதம் செய்துவிட்டுப் போனார்.

தொடர்ந்து அந்த ஓவியர் இயேசு காவியத்திற்கு ஏற்ற மாதிரிகள் கிடைக்கும்போது ஓவியங்களை வரைந்து குவித்தார். இப்படியாக இருந்த முதுமை நிலையை அடைந்துவிட்டார்.

இவ்வாறு இயேசுவின் வாழ்க்கை வரலாற்றைத் தக்க மாதிரிகளை வைத்து வரைந்து வந்தபோது, அவருக்கு இயேசுவானவரை காட்டிக் கொடுத்த 'யூதாஸ்' உருவத்தை வரைய வேண்டியிருந்தது. அதற்கு கொடூரமான முகம் கொண்ட மனிதனைத் தேடி அலைந்தார். நீண்டகாலமாகத் தேடியும் ஓவியரால் கொடூர முகம் கொண்ட மனிதனை இனம் காண இயலவில்லை.

ஒருநாள் ஒரு சிறைச்சாலைக்கு அருகில் சென்றபோது அங்கே ஒருவனை காவலர்கள் கட்டிப் போட்டு அடிப்பதைப் பார்த்தார். அவனைக் கண்டதும் ஓவியர் இவனது முகம் யூதாஸ் ஓவியத்திற்கு ஏற்ற முகமாக இருக்கிறதே என்று சந்தோஷப்பட்டார். பின்னர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் தன்னைப் பற்றி அறிமுகம் செய்து, அவனை மன்னித்து தன்னுடன் அனுப்ப வேண்டினார். அதிகாரியும் சரி என்று அவனை விடுதலை செய்து ஓவியருடன் அனுப்பி வைத்தார்.

பல கொள்ளைகளையும், கொடிய செயல்களையும் செய்த கொடியவன் அவனை வீட்டிற்கு அழைத்து வந்து, தான் ஓர் ஓவியம் வரைய இருப்பதாகவும், அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்தால் நிறையப் பணம் தருவதாகவும் கூறினார். அவனும் ஒத்துக் கொள்ள, ஓவியர் எதிர்பார்த்தபடியே அவனது முகம் கொடூரமாக இருந்ததால், அவனை வைத்து யூதாஸ் ஓவியத்தைத் தத்ரூபமாக வரைந்து முடித்தார்.

ஓவியம் வரைந்து முடிந்ததும், திருடன் அந்த ஓவியத்தைப் பார்த்தான். பின்னர் ஓவியரைப் பார்த்து, ''இது நானா, இத்தனை கொடிய முகமா? என்னை யாராக வரைந்தீர்கள்?'' என்று கேட்க, ஓவியர் ''தவறாக நினைக்காதே, நான் தேவமைந்தன் இயேசு பிரானை காட்டிக் கொடுத்த யூதாஸாக உன்னை வரைந்தேன்'' என்றார். அதைக்கேட்டதும் அந்த கொடியவன் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. கதறிக் கதறி அழுதான். ஓவியருக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை ''நீ எத்தனையோ கொடி செயல்களை தெரிந்தே செய்திருக்கிறாய், அப்படி இருந்தும் ஏன் நீ அழுகிறாய்?'' என்று கேட்டார்.

அப்போது அவன், ''ஐயா! நான் சிறுபிள்ளையாக இருக்கும்போது ஓவியர் ஒருவர் என்னை குழந்தை இயேசுவாக வரைந்தாராம், அதைப் பற்றி என் பெற்றோர் பலமுறை என்னிடம் கூறியிருக்கிறார்கள். அன்று அப்படி தெய்வாம்சம் மிக்க குழந்தையாகத் தெரிந்த நான் இன்றோ கொடிய முகத்தைக் கொண்ட யூதாஸாக உங்களுக்குத் தெரிகிறேனே, என்று நினைத்து வருந்துகிறேன்'' என்றான்.

உடனே ஓவியருக்கு தாங்க முடியாத அதிர்ச்சி, ''என்ன, நான் அன்று வரைந்த இயேசுவின் மாதிரியாகத் தெரிந்த குழந்தையா நீ, ஏன் இப்படி மாறினாய்?'' என்று கேட்டார். அதற்கு அவன், ''ஐயா! நீங்கள்தான் அந்த ஓவியரா?, நான் நல்லவனாகத்தான் இருந்தேன். ஆனால், என் நண்பர்கள் நல்லவர்களாக இருக்கவில்லை. என் பெற்றோர் எவ்வளவோ அறிவுரை கூறியும் நான் கேட்கவில்லை. கெட்டவர்களோடு நட்புக் கொண்டிருந்ததால் நான் அனைத்து வகையான கெட்ட செயல்களையும் செய்தேன். அதனாலேயே என் மனமும், முகமும் கொடூரமாக மாறிவிட்டது. என்னை மன்னியுங்கள், நான் இத்தனை கொடியவனாக இருந்ததை நினைத்து வேதனைப்படுகிறேன். இனிமேல் நான் நல்லவனாக உங்களுக்கு உதவியாளனாகவே இருக்க விரும்புகிறேன்'' என்றான்.

# வழிகாட்டி



அந்தியூர் என்ற காட்டில் புறாக்கள் கூட்டமாக சேர்ந்து ஓர் ஆலமரத்தில் வாழ்ந்து வந்தன. அவற்றில் ஒரு வயதான புறாவும் இருந்தது. புறாக்கள் எல்லாம் தினமும் இரை தேடி முடித்த பின் மரத்தில் வந்து அமரும். அப்போது வயதான புறா தன் அனுபவங்களைக் கூறும். அப்போது புறாக்கள் பழங்கதைகளைக் கூறி எங்களுக்கு ஏன் வீணாக அறிவுரை கூறுகிறீர்கள்? நாங்களே யோசிக்கும் அளவுக்கு எங்களுக்கும் அறிவு இருக்கிறது என்று உதாசீனப்படுத்தின.

ஒருநாள் அனைத்துப் புறாக்களும் சேர்ந்து உணவு தேடிச் சென்றன. அங்கே ஓரிடத்தில் பறவைகளைப் பிடிக்க வேடன் ஒருவன் வலை விரித்திருந்தான். அதன் அடியில் பெரிய பெரிய நெல்மணிகளைக் கொட்டியிருந்தான். புறாக்கள் அனைத்தும் அந்த நெல்மணிகளை உண்ணத் திட்டமிட்டன. ஆனால், வயதான புறா அது வேடன் விரித்த வலை, நாம் போய் நெல்லை சாப்பிட்டால் மாட்டிக்கொள்வோம். எனவே, வேறு இடத்தில் இரை தேடலாம் என்றது. ஆனால், மற்றப் புறாக்கள் ஒத்துக் கொள்ளவில்லை. வலையில் மாட்டாமல் நெல்மணிகளை சாப்பிடப் போகிறோம் என்று கூறி வலையின்மீது சாமர்த்தியமாக அமர்ந்து சாப்பிட்டன. ஒரு புறாவும் வலையில் மாட்டவில்லை. அப்போது வயதான புறாவைப் பார்த்து கேலி செய்தன மற்றப் புறாக்கள்.



திடீரென்று ஒரு புறா நிலைதடுமாறி மற்றப் புறாமேல் விழ, அனைத்தும் சரிந்து நிலைகுலைய, அவற்றின் கால்கள் வலையில் பின்னிக்கொண்டன. அவ்வளவுதான் அனைத்துப் புறாக்களும் வலையில் மாட்டிக்கொண்டன. அவை அனைத்தும் எவ்வளவோ முயற்சி செய்தும் தப்பிக்க முடியவில்லை. உடனே, அனைத்துப் புறாக்களும் வயதான புறாவைப் பார்த்து மன்னிப்புக் கேட்டு, தங்களைக் காப்பாற்ற உதவிசெய்ய வேண்டும் என்றன. வயதான புறா ''என் ஒருவனால் உங்கள் அனைவரையும் விடுவிக்க முடியாது. ஆனால், ஒரு வழி சொல்கிறேன், அதன்படி நடந்தால் தப்பிக்கலாம்'' என்றது.

புறாக்கள், ''சொல்லுங்கள் இதுவரை உங்கள் அனுபவங்களை உதாசீனப்படுத்தியதற்கு மன்னியுங்கள்'' என்றன. வயதான புறா ''இன்னும் சிறிது நேரத்தில் வேடன் வருவான், அவன் வரும்போது நீங்கள் அனைவரும் மரணம் அடைந்தது போன்று விழுந்துகிடக்க வேண்டும். அவனும் இறந்துபோன புறாக்கள்தானே என்று உங்களை எடுத்து தரையில் போடுவான், கடைசிப் புறாவைப் போடும்வரை அமைதி காக்க வேண்டும். கடைசிப் புறாவைப் போட்டதும், நான் வேகமாக வந்து வேடனைக் கொத்துவேன், அவன் நிலைகுலைந்தவுடன் நீங்கள் அனைவரும் உடனே பறந்து தப்பித்துவிடுங்கள்'' என்றது.

அனைத்துப் புறாக்களும் இறந்து போனது போல் நடித்தன. அங்கே வந்த வேடனும் அனைத்தும் விழுந்து கிடப்பதைக் கண்டு, இறந்து போயிருக்கும் என்று நினைத்து, ஒவ்வொரு புறாவையும் வலையில் இருந்து விடுவித்து கீழே போட்டான். கடைசிப் புறாவையும் போட்டுவிட்டு நிமிர்ந்தபோது, வயதான புறா வேகமாகப் பறந்து வந்து வேடனின் தலையில் கொத்தியது. திடீரென்று நடந்த இந்த சம்பவத்தால் வேடன் பயந்து கண்களை மூடிக்கொண்டு, தலையின் மேல் கைகளை வீசினான்.

அவ்வளவுதான் அந்த சந்தர்ப்பத்தில் அனைத்துப் புறாக்களும் தப்பிப் பறந்தோடின. பின்னர் அனைத்து புறாக்களும் ஆலமரத்தில் கூடி, வயதான புறாவைப் போற்றின, பெரியவர்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் இருக்கிறது. அவர்கள் சொல்வதைக் கேட்டு நடந்தால் துன்பமே வராது என்பதைப் புரிந்துகொண்டோம். இனிமேல் உங்கள் அறிவுரைபடியே நடப்போம் என்று உறுதி கூறின. தினமும் வயதான புறாவின் அறிவுரைகளைக் கேட்டு நடந்து ஆபத்தில்லாமல் சந்தோஷமாக வாழ்ந்து வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபிரகாம் லிங்கன் கற்றுக்கொடுத்த பாடம்



ஐக்கிய அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்தான் 'ஆபிரகாம் லிங்கன்'. இவர், மிக உயர்ந்த பண்புகளைக் கொண்டவர். இவரின் தந்தை பாதணிகள் தயாரிப்பு தொழிலிலும் ஈடுபட்டு வந்தார். அக்காலத்தில் அமெரிக்க சமூகத்தில் இருந்த உயர் வர்க்கத்தினர், நாட்டின் அதி உயர் பதவியான ஜனாதிபதி பதவியை, பாதணி தயாரிக்கும் தொழிலாளியொருவரின் மகன் பெறுவது குறித்து அதிருப்தி கொண்டிருந்தனர். காரணம், அப்பதவி தமது உயர் வகுப்பிலிருந்து வரும் தகுதியான ஒருவருக்கு கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் அவாவாக இருந்தது.

## கடமைகளை ஆரம்பிக்கும் நாள்

அன்று, ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதி பதவியை ஏற்று தனது கடமைகளை ஆரம்பிக்கும் முதலாவது நாள். ஆரம்ப உரை ஆற்றவேண்டிய நேரம் வந்தது. அச்சந்தர்ப்பத்தில் சபையின் மத்தியில் அமர்ந்திருந்த ஒருவர் எழும்பினார். அவர் ஒரு நிலப்பிரபு. அத்துடன், செனட் உறுப்பினரும் கூட. அவர் ஆபிரகாம் லிங்கனைப் பார்த்து, "லிங்கன் அவர்களே! உங்களின் தந்தை எனது குடும்பத்திற்குரிய பாதணிகளைத் தயாரிப்பவர் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது" என்றார். இவ்வாறு அவர் கூறியதும் செனட் சபையெங்கும் சிரிப்பொலியால் அதிர்ந்தது.



ஆபிரகாம் லிங்கனை தாம் அவமானப்படுத்திவிட்டோம் என்ற எண்ணத்தில் அவர்கள் அனைவரும் சிரித்தார்கள். எனினும், லிங்கன் இதனை சற்றும் பொருட்படுத்தவில்லை. அவர், அந்த செல்வந்த நிலவுடமையாளரை நோக்கி; "ஐயா! எனது தந்தை உங்கள் குடும்பத்தின் பாதணிகளைத் தயாரிப்பவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவரின் வேறு பல வாடிக்கையாளர்களும் இங்கு இருக்கலாம். உண்மையில், எனது தந்தையைப் போல மிகச் சிறந்த முறையில் பாதணிகளை தயாரிக்கக்கூடிய வேறொருவரையும் நான் இதுவரை பார்த்ததில்லை. அவர் தனது முழு ஆத்ம திருப்தியுடனேயே அவற்றைத் தயாரிக்கின்றார். ஐயா! நான் உங்களிடம் ஒன்று மட்டும் கேட்கிறேன். உங்களுக்கு அவர் தயாரித்த பாதணிகள் குறித்து ஏதேனும் முறைப்பாடுகள் அல்லது குறைபாடுகள் உள்ளனவா? உங்களுக்கு அது குறித்து முறைப்பாடுகள் இருந்தால், நான் உங்களுக்கு வேறு ஒரு சோடி பாதணியைத் தயாரித்துத் தருகிறேன். எனினும், நான் அறிந்த வகையில், ஒருநாளும் ஒருபொழுதும் எனது தந்தை தயாரித்த பாதணிகள் குறித்து எந்தவொரு முறைப்பாடும் இதுவரை வந்ததில்லை. அவர் மிக உயர்ந்த மனிதர். அத்தோடு, மிகச் சிறந்த படைப்பாளி. அற்புதமான கலைஞர். அத்தகைய ஒருவர் எனது தந்தையாக இருப்பது குறித்து நான் மிகவும் பெருமை அடைகிறேன்" என்றார்.

**நீங்கள் என்ன (தொழில்) செய்கிறீர்கள் என்பது முக்கியமன்று. ஆனால், அதனை எவ்வாறு (எந்த முறையில்) செய்கிறீர்கள் என்பது குறித்தே உங்கள் கவனம் தேவை என்ற பாடத்தை உணர்த்தும் சம்பவம்.**

ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் அந்தப் பதிலைக் கேட்டு முழு செனட் சபையும் அதிர்ந்து போனது. அவர் எத்தகைய மனிதன் என்பதை புரிந்துகொள்ள அவர்களுக்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது. லிங்கனின் தந்தை பாதணிகளைத் தயாரிப்பவர் என்பதை நினைவூட்டிய அந்த மனிதர் வாயடைத்து வெட்கித் தலைகுனிந்தார். அவரைப் பார்த்து "ஏன் நீங்கள் அமைதியாக இருக்கிறீர்கள்? பேசுங்கள். என்னை இழிவுபடுத்த வேண்டும் என்பதுதானே உங்கள் நோக்கம்? ஆனால், இப்பொழுது அவமானப்பட்டு தலை குனிந்து நிற்பது நீங்கள்தானே?" என்று ஜனாதிபதி லிங்கன் கேட்டார்.

(அ)

# 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



எம்.ஹபீஸ், 99 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவனாவார்.



எம்.சாபிர், 86 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவனாவார்.



எம்.ஆசிக், 78 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவனாவார்.



எம்.சாதிர், 74 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாவ/தெல்கஹகொட மு.க.வித்தியாலய மாணவனாவார்.

## களு/முஸ்லிம் மத்திய கல்லூரி



பி.எஃப்.ஹப்ஸா, 103 புள்ளிகள்.



எஃப்.பவாஸா, 101 புள்ளிகள்.



ஆர்.பர்ஸாத் அஹமட், 99 புள்ளிகள்.



எஃப்.ஸல்ஹா, 97 புள்ளிகள்.



எஸ்.எஃப்.ஹப்ஸா, 96 புள்ளிகள்.



என்.ஸயான் அஹமட், 94 புள்ளிகள்.



எஃப்.அம்ரா, 90 புள்ளிகள்.



எம்.நுஸ்ரி, 89 புள்ளிகள்.



எஸ்.ரோஷன் அஹமட், 88 புள்ளிகள்.



எஃப்.இல்மா, 87 புள்ளிகள்.



எம்.ருஷ்தான், 85 புள்ளிகள்.



எம்.அக்ரம், 85 புள்ளிகள்.



எஃப்.ஷிமாயா, 84 புள்ளிகள்.



ஆர்.அப்துல் மலிக், 84 புள்ளிகள்.

ஏ.யூனுஸ் அஹமட், 95 புள்ளிகள்.

எஃப்.அஹமட், 90 புள்ளிகள்.

எம்.ரஷாத், 87 புள்ளிகள்.

எம்.உஸ்மான், 85 புள்ளிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இற்றைக்கு 2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியின் காலநிலை முற்றாக மாறுபட்டிருந்தது. துருவப்பகுதி பனிமலைகள் வியப்பூட்டும் வகையில் உயர்வடைந்திருந்தன. பூமியின் நிலப்பகுதி 200 மீற்றர் அடர்த்தி கொண்ட பனித்தட்டினால் மூடப்பட்டிருந்தது. ஆம்! அவ்வாறான காலப்பகுதிதான் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்த 'பனியுகம்' ஆகும்.

# கற்கால
# ஆரம்

## வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிகாலம்

பூமியின்மீது சூரிய ஒளி மிகவும் குறைவாகப் படர்ந்ததன் காரணமாக பனியுகம் ஆரம்பமானதாக 1920 இல் சைபீரிய கணித அறிஞரான மிலுட்டின் மிலன்கோவிட்ச் என்பவர் பனியுகம் குறித்து மேற்கொண்ட ஆய்வின் முடிவில் தெரிவித்துள்ளார். அவரது கண்டுபிடிப்பின்படி 22000,41000 மற்றும் 10000 ஆண்டுகளுக்கு ஒருமுறை பனியுகம் பூமியில் உருவாகும். இந்த கோட்பாட்டினை 'மிலன்கோவிட்ச் சுழற்சி' என்று அழைப்பர்.

இந்தக் காலப்பகுதியில் பூமியிலிருந்த சமுத்திரங்களின் நீர் வற்றிப் போயிருந்தது. கடல் மட்டம் குறைவடைந்தமையால், கண்டங்களுக்கிடையே பாலங்கள் உருவாகின. ஆதிகால மனிதர்கள் அமெரிக்காவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்தனர். எவ்வாறாயினும், உலகம் முழுவதும் கடும் குளிர் காலநிலை நிலவியது. வெப்பவலயக் காடுகள் மறைந்து அங்கு வசித்த உயிரினங்களும் அழிந்து போயின. பாரிய யானைகள் அழிந்து போயின. காண்டா மிருகங்கள், நீர்யானைகள் என்பன தென் பகுதி நோக்கி நகர்ந்தன. அன்று மனிதர்களின் பரம எதிரியாக இருந்த தந்தம் கொண்ட புலி இனமும் முற்றாக அழிந்துபோய் விட்டது. பறவைகளும் விலங்குகளும் பெருமளவில் இறந்துபோயின. சில இனங்கள் தெற்கு நோக்கி நகர்ந்தன.

பனிமலைத் தட்டுக்கள் முன்னோக்கி வந்தமையால், நிலைமை மிகவும் மோசமடைந்தது. வருடாந்தம் புதிய பருவகாலம் ஆரம்பமாயிற்று. ஆதிகால மானிட இனம் குளிரால் வாடியது. குளிரில் இருந்து தப்பிக்க குழந்தைகளை அரவணைத்துக்கொண்டு ஒன்றாக இணைந்து வாழ்ந்தனர். உண்மையில் இதுவே உலகத்தின் முடிவு என்று அவர்கள் கருதியிருக்கக் கூடும். காலநிலை மிகவும் கொடுமையானதாக இருந்தபோதிலும், அவர்கள் தமது பயணத்தைக் கைவிடவில்லை. இதேவேளை, தமக்கான உணவுகளைத் தேடிக் கொள்ளவும் அவர்கள் பெரிதும் சிரமப்பட்டனர்.


## முதலாவது வேட்டைக்காரர்கள்

உணவுகளைத் தேடிக்கொள்வதே மனிதனின் பிரதான நோக்கமாக இருந்தது. இதற்கென அவர்களுக்கு பலதரப்பட்ட கருவிகள் தேவைப்பட்டன. கற்களினாலான ஆயுதங்களை அவர்கள் உருவாக்கிக் கொண்டனர். கற்கருவிகள் பலவகையான கற்களைக் கொண்டு செய்யப்பட்டன. தீக்கற்கள் செதுக்கப்பட்டு, வெட்டும் கற்களாகவும் ஆயுதங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. எரிமலைப் பாறைக் கற்களும் மணற்கற்களும் அரைக்கும் கற்களாகப் பயன்பட்டன.


'குலக்குழுக்கள்' எனப்படும் சிறு குழுக்களாக இயங்கிய கற்கால மனிதர்கள் உணவை தாவரங்களை சேகரிப்பதன்மூலமும் விலங்குகளை வேட்டையாடுவதன்மூலமும் பெற்றுக்கொண்டனர். காலப்போ[illegible] தாவர உணவுகளைக் குறைத்துக் கொண்ட ஆதி மனிதர்கள் குளிர்காலநிலை காரணமாக வேட்டையாடி பெருமளவு இறைச்சியினை சேகரித்து வைக்க முயற்சித்தனர். இதன்போது, பாரிய அளவினைக் கொண்ட உயிரினங்கள் உலகில் வாழ்ந்தன. குதிரைகள், பைசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மாடுகள் மற்றும் மிகப் பிரமாண்டமான 'மெமத்' யானைகளும் இருந்தன. இவற்றுள் மெமத் யானைகளை வேட்டையாடுவதிலேயே அவர்கள் அதிக ஆர்வம் காட்டினர். ஒரு மெமத் யா[illegible]யை வேட்டையாடுவதனால், சில வாரங்கள் பட்டினியின்றி அவர்களால் வாழ முடிந்தது.

## பனிக்காலத்தின் கலைஞர்கள்

பனிக்காலத்தின் கலைத்திறன்கள் குறித்து சுமார் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே அறியக் கிடைக்கின்றது. குளிர்காலநிலை காரணமாக குகைகளுக்குள் வாழ்ந்த மனிதன் தாம் பார்த்த மற்றும் வேட்டையாடிய உயிரினங்களை குகைச் சுவர்களில் குறித்து வைக்க ஆரம்பித்தான். இவ்வாறான குகைச் சித்திரங்கள் ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாவில் இன்றுவரை காணப்படுகின்றன. இவற்றுள் தென் பிரான்சின் லஸ்கோ, ஸ்பெயினின் அல்ட்டமைரா குகைகளில் உள்ள சித்திரங்கள் முதன்மை இடத்தினைப் பெறுகின்றன. அத்துடன், அவர்கள் அழகிய சிற்பங்களையும் வடித்தனர். இவற்றுள் 'வீனஸ்' என்ற சிறிய பெண் உருவம் பிரதான இடத்தினைப் பெறுகின்றது.

## மெமத் வேட்டை

மெமத் என்பது பனியுகத்தில் வாழ்ந்த பாரிய உருவத்தைக் கொண்ட யானை இனமாகும். இவற்றின் உடல் அடர்ந்த மயிர்களால் மூடப்பட்டிருந்தது. இரண்டு பெரிய கூர் தந்தங்களைக் கொண்ட இந்த விலங்கினைக் கொல்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல. இதற்கு மனிதப்படை ஒன்றும் ஆயுதங்களும் அவசியமாக இருந்தன. ஆனால், ஒரு சில கற்களிலான ஆயுதங்களைப் பயன்படுத்தியே இம் மெமத் விலங்கினை ஆதிமனிதன் வேட்டையாடினான். ஆதிமனிதர்கள் இவ்வாறான பாரிய உயிரினத்தை வேட்டையாடுவதற்கு பல வழிமுறைகளைக் கையாண்டனர்.

மெமத் விலங்கினைச் சுற்றி வளைத்த பின்னர் சுற்றி வரத் தீ மூட்டுவர். அது தீயைக் கண்டு அஞ்சிப் பின்வாங்கும். திட்டமிட்டதன்படி, மலைமுகடு அல்லது சதுப்பு நிலத்தில் வேட்டைக்களம் நிகழும். அதன்பின் ஒவ்வொருவரும் குழுவாக தமது கைகளில் உள்ள கருவிகளைக் கொண்டு மிருகத்தைக் குத்தியும், தீயைப் பிடித்து அச்சுறுத்தியும் அந்த பாரிய விலங்கை நிலை தடுமாறச் செய்வர். இதன்போது, மெமத் மேலும் சதுப்பு நிலத்தில் சிக்கிவிடும். அலறிக்கொண்டு மீண்டு வரத் தத்தளிக்கும். இதன்போது, வேட்டைக்காரர்கள் அதன் அருகில் நெருங்கிச் சென்று அதனைக் கொல்வதற்கு எத்தனிப்பர். இதற்கு அவர்களுக்கு கற்களிலான ஆயுதமே தேவைப்பட்டது. வேட்டையின் பயன்களைப் பத்திரமாகப் பத்திரப்படுத்தினர். பல நாட்கள் உணவாகவும், குளிருக்கு கதகதப்பான ஆடையாகவும் மெமத்தின் உடலும், தோலும் ஆதிமனிதர்களுக்கு பயன்பட்டன.

-ப்ரியா

# த்தையடுத்து மான னியுகம்'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி -II (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..........................................................

09) வீட்டுத் தோட்டத்தில் அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்தும் பிராணி;

1. நத்தை 2. செண்பகம் 3. காகம்

10) உடலை நோய்களில் இருந்து பாதுகாக்க உதவும் உணவுக்கூறு;

1. புரதம் 2. மாப்பொருள் 3. கனியுப்புகள்

11) மிக வேகமாக ஆவியாகக்கூடிய திரவம் பின்வருவனவற்றுள் எது?

1. ஸ்பிரிட் 2. பெற்றோல் 3. மண்ணெண்ணெய்

12)  அருகில் உள்ள வித்துக்கள் பரம்பலடையும் முறை;

1. காற்றினால் 2. நீரினால் 3. விலங்கினால்

13) பொருட்களை சேமித்து வைக்கும் இடம்;

1. தனியறை 2. வைப்பகம் 3. களஞ்சியம்

14) தாவரச் சாற்றை உட்கொள்ளும் பிராணி எது?

1. பெண் நுளம்பு 2. ஆண் நுளம்பு 3. மயிர்க்கொட்டி

15) ஒரேயொரு தடவை பூத்துக் காய்த்து மடிந்துவிடும் தாவரம் எது?

1. வாழை 2. சேம்பு 3. கத்தரி

16) தண்டில் காய் காய்க்கும் மரம் எது?

1. றம்புட்டான் 2. நெல்லி 3. மங்குஸ்தான்

17) பின்வருவனவற்றுள் புற்று அமைக்கும் பிராணி;

1. கறையான் 2. பாம்பு 3. மண்புழு

18) மலைநாட்டில் வாழும் மக்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ள பிராணி;

1. அட்டை 2. நத்தை 3. குரங்கு

19) பின்வரும் வினாக்களுக்கு சரியான விடை தருக.

01. அருகிலுள்ள நேர்கோட்டின் நீளத்தை அளந்து எழுதுக. ........................




02. அனோஜ் மாலைவேளை நடந்து சென்றபோது, அவனது நிழல் அவனது வலது பக்கமாக அசைந்தது எனின், அவன் நடந்து சென்ற திசை யாது? ..............................

03. ஒரு பூவிலுள்ள இதழ்களின் எண்ணிக்கை 3 ஆகும். அவ்வாறான 34 பூக்களிலுள்ள இதழ்களின் எண்ணிக்கை யாது?........................

04. ஒரு பஸ் வண்டியில் 55 பேர் பயணம் செய்ய முடியும் எனின், 185 பேர் பயணம் செய்ய எத்தனை பஸ்கள் தேவை? .................

05. ஒருவன் ஒரு குழியை மூன்று கட்டங்களாக வெட்டத் தீர்மானித்தான். முதல் கட்டத்தை 6 நாட்களிலும் இரண்டாவது கட்டத்தை முதல் கட்டத்தின் அரைவாசிக் காலத்திலும் மூன்றாம் கட்டத்தை இரண்டாம் கட்டத்தின் மூன்று மடங்கு காலத்திலும் பூர்த்தி செய்யத் தீர்மானித்தான் எனின், அவனுக்கு எடுத்த நாட்கள் எத்தனை? .........................

★ **அருகில் உள்ள தரவைப் பயன்படுத்தி 6 ஆம், 7 ஆம் வினாக்களுக்கு விடை தருக**

| 2 பேனா, 1 பென்சில் → ரூபா 32 | 2 பேனா, 2 பென்சில் → ரூபா 38 |
|---|---|




06. ஒரு பேனாவின் விலை யாது? ..............................................

07. 5 பென்சில்களின் விலை யாது? :..........................................

08. இராமனின் மாதாந்த வருமானம் ரூபா 36,000 ஆகும். இதில் $\frac{1}{3}$ பங்கை உணவுக்கும் $\frac{2}{6}$ பங்கை மருந்துக்கும் செலவுசெய்தான். மிகுதியை போக்குவரத்துக்கு செலவுசெய்தானாயின், போக்குவரத்திற்காக செலவு செய்த பணம் எவ்வளவு? ..........................................

09. $\frac{1}{5} + \frac{3}{15} =$ ..........................................

10. 2215+3100+2206 = ..........................................

## பகுதி - II விடைகள்

*01)* 1. தென்னை, பனை
2. வேம்பு, வெற்றிலை, கற்பூரவள்ளி
3. சுவாசிப்பதற்குத் தேவையான ஒட்சிசனை தருகின்றன.
4. உணவாக, மருந்தாக, சூழலை தூய்மைப்படுத்த, சுவாசிக்க உதவுகின்றன.
5. விருட்சம்
6. தருகின்றன/காக்கின்றன
7. வேண்டாம்
8. மா/பலா/வாழை/தென்னை

*02)* 1. மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்குப் போனார்கள்.
2. தங்கையும் அக்காவும் நடனம் ஆடினார்கள்.
3. உழவன் வயலை உழுது தானியங்களை நட்டான்.

*03)* 1. யானைகள் கூட்டம் கூட்டமாகச் சென்றன.
2. சூரியனைக் கண்டதும் தாமரைப் பூ மலர்ந்தது.
3. நான் நாளை பாடசாலை செல்வேன்.

*04)* ★ ஆண்பால் - (எதுவுமில்லை)
★ பெண்பால் - தலைவி/ஆசிரியை
★ பலர்பால் - மாணவர்கள்
★ பொதுப்பால் - அதிபர்

*05)* 1. காலையில் கிழ்வானில் சூரியன் மெல்ல எழுந்து வருவான்.
2. மீனவர்கள் கடலில் வலைவீசி மீன்கள் பிடிப்பார்கள்.

*06)* 1. நாளை உங்களை சந்திப்பேன்.
2. மீண்டும் வருக/திரும்பவும் வாருங்கள்.

*07)* 1. நாளை சந்திப்போம்.
2. புத்தகத்தை எடுக்கவும்/எடுக்க.

| 08) | | | 19) |
|---|---|---|---|
| 01. 3 | 09) 1 | | 01. 3.5cm |
| 02. 2 | 10) 3 | | 02. வடக்கு |
| 03. 2 | 11) 1 | | 03. 102 |
| 04. 1 | 12) 2 | | 04. 4 |
| 05. 2 | 13) 3 | | 05 18 |
| 06. 2 | 14) 2 | | 06. ரூபா 13.00 |
| 07. 3 | 15) 1 | | 07. ரூபா 30.00 |
| 08. 1 | 16) 2 | | 08. ரூபா 12,000.00 |
| 09. 2 | 17) 1 | | 09. $\frac{6}{15}$ |
| 10. 2 | 18) 1 | | 10. 7521 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கிராமத் தலைவர் - ராலஹாமி



இற்றைக்கு ஏறக்குறைய ஐந்தாறு தசாப்தங்களுக்கு முன்னர், இன்றைய கிராம சேவகர் ஒருவர் செய்யும் கடமைகளை அன்று கிராமத் தலைவர் செய்தார். அன்று அவரை கிராமத்து மக்கள் 'ராலஹாமி' என்று அழைத்தனர். அடக்கமும் விநயமும், சகஜமாகப் பழகும் தன்மையும் கொண்ட இன்றைய கிராம சேவகரைப் போன்ற பண்பு அன்றைய கிராமத் தலைவரிடம் இருக்கவில்லை. அவர் கோட் மற்றும் டுவிட் உடை அணிந்திருந்தார். சில கிராமத் தலைவர்கள் கால்சட்டையும் ஷேர்ட்டும் அணிந்தனர். இவர்கள் எப்பொழுதும் தம்மை பெரியவர்களாக காட்டுவதற்காக ஆடம்பரமாக வாழ்ந்தனர்.

கிராமத்தில் அதிக சொத்துக்களைக் கொண்ட நம்பகத் தன்மை நிறைந்த பரம்பரையைச் சேர்ந்த ஒருவரையே இப்பதவிக்கு அமர்த்துவர். அதனால், அவர்கள் இறுமாப்பு நிறைந்தவராகவும் அதிகாரம் செலுத்துபவராகவும் தம்மைக் காட்டிக் கொண்டனர். சில கிராமத் தலைவர்கள் கொண்டை கட்டி பெரிய மீசையை மேல் நோக்கி முறுக்கி இருப்பார்கள். அவரது பாதுகாப்பிற்காக அவருடன் குண்டர்கள் பலர் இருந்தனர். அதனால், தம்மைவிட அதிகாரம் உள்ளவர் அக்கிராமத்தில் எவரும் இல்லை என அவர்கள் எண்ணினர். அவருக்கு எதிராக எவராவது செயல்பட்டால் குறிப்பிட்ட நபரின் சொத்துக்களைத் தம்வசம் ஆக்கினர். அது மாத்திரமல்ல; அவரை கொலை செய்வதற்குக்கூட துணிந்தனர். சில பெரிய கிராமங்களுக்கு இரு கிராமத் தலைவர்கள் இருந்தனர். இவர்கள் அரசுக்கு சார்பாக சட்டத்தை செயல்படுத்தும் நபர்களாக தம்மை எப்பொழுதும் வெளிக்காட்டிக் கொண்டனர். எனினும், கிராமத்தில் நடக்கும் அநேக சட்டவிரோத செயற்பாடுகள் பெரும்பாலும் இவரின் கட்டளைப்படியே நிகழ்ந்தன. ஆயினும், நற்குணம் படைத்த கிராமத்தலைவர்களும் இருந்தனர். அவ்வாறானோர் மிகச் சொற்பமே. கிராமத்தில் ஏதேனும் விழாக்கள் நடந்தால் அதற்கு கிராமத் தலைவரே தலைமை வகிப்பார். அவரைப் பாதையிலோ வேறு எங்கிலோ கிராமத்தவர்கள் கண்டால் தாழ்ந்து அடிபணிவர். விலகிச் செல்வர். அந்தளவிற்கு அப்பாவி (பாமரத்தனமான) கிராம மக்கள் அவருக்கு பயந்தவாறு வாழ்ந்தனர். கிராமத்தலைவரின் மனைவியை 'ஹாமினே' எனவும் அவரது ஆண்பிள்ளைகளை 'சின்ன ராலஹாமி' எனவும் பெண்பிள்ளைகளை 'மெனிக்கே' என்றும் அழைத்தனர்.



1860 களில் கிராமத் தலைவர் முறையை சம்பளம் கிடைக்கும் ஒரு பதவியாக ஆங்கிலேயர் உருவாக்கினர். அதற்கு முன் அநுராதபுர யுகத்தில் இலங்கையின் முதல் மன்னனாக கருதப்படும் பண்டுகாபயன் காலத்தில் இருந்தே இம்முறை நடைமுறையில் இருந்து வந்துள்ளது. அப்பதவிகள் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டன. கம்பதி, ஊர்நாயகன், காமினி போன்ற பெயர்களால் பதவிக்குரியவர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் தமது சேவையை சரியாகச் செய்தனர்.கிராமத் தலைவரின் மேலதிகாரி மாவட்ட அரசாங்க அதிபராவார். கிராமத் தலைவர் பதவிக்கு தகுதிவாய்ந்த ஒருவரை அக்கிராமத்தில் இருந்தே தெரிவு செய்வது அரச அதிபர் தலைமையிலான குழுவாகும். கிராமத் தலைவருக்கு எதிரான முறைப்பாடுக்ளை அரசாங்க அதிபரே விசாரிப்பார். 1960 களில் கிராமத்தலைவர் முறை இல்லாதொழிந்தது. அதற்குப் பதிலாக கிராமசேவகர் அல்லது கிராம உத்தியோகத்தர் என அழைக்கப்படும் முறை நடைமுறைக்கு வந்தது. அதன்மூலம் அப்பாவி கிராமவாசிகளுக்கு பெரும்பாலும் நன்மைகள் கிடைக்க ஆரம்பித்தன. (அ)

## முன்னைய காலத்து நடைமுறைகள்


வெல்லுங்கள்!

விஜய் — TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*09.04.2014* TOP News கேள்விக்கான விடை: 08

Pen Drive வெற்றியாளர்:
தர்ஷிகா,
17/9A, சிங்ஹ வீதி, 1 ஆம் ஒழுங்கை,
மாபோலை, வத்தளை.

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive
(23.04.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
23.04.2014

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தொ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

தரம்: ..............................

..............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்லஸ்ஸ கிளர்ச்சி

கி.பி 1818 ஆம் ஆண்டளவில், கண்டியிலுள்ள உயர் வர்க்கத்தினருக்கும், ஆங்கிலேயருக்கும் இடையில் வெறுப்பு அதிகரித்துக் காணப்பட்டது. ஒரு கிளர்ச்சி ஏற்படும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது. எனினும், 1818 ஆம் ஆண்டு ஏற்பட்ட கிளர்ச்சியானது, திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டதல்ல. உடனடிக் காரணங்களால் ஏற்பட்டதாகவே காணப்பட்டது.


நாடு கடத்தப்பட்ட மன்னனின் குடும்பத்தை சார்ந்தவன் என பகிரங்கமாக தெரிவித்துக்கொண்டு, பிக்குகளின் ஆதரவுடன் வெல்லஸ்ஸ பகுதிக்கு ஒருவன் வந்தான். அது குறித்து, பதுளையிலுள்ள உதவி முகவராகிய சில்வெஸ்டர் டக்லஸ் என்பவருக்கு தெரியவந்தது. அதைப்பற்றி விசாரிப்பதற்காக முஸ்லிம் பகுதித் தலைவரை அங்கு அனுப்பினார். அவரைக் கிளர்ச்சிப் படையினர் கைது செய்தனர். இச் செய்தியை கேள்வியுற்றதும், வில்சன் எனும் ஆங்கிலத் தளபதி ஒருவர், படையொன்றை திரட்டிக் கொண்டு அங்கே சென்றார். எனினும், எதுவித பயனும் இல்லாமல் இடையில் திரும்பினர். மீண்டும் பதுளைக்கு திரும்பி வரும் வழியில் தளபதி வில்சன் கிளர்ச்சியாளர்களால் சுடப்பட்டு தளத்திலேயே மரணம் அடைந்தார். அவரின் மொழிபெயர்ப்பாளரையும் அவர்கள் கைது செய்தனர். மேக்டோவேல் கோட்டையிலிருந்து செய்தி ஓலையைக் கொண்டு வந்த மூன்று படையினரும் கொல்லப்பட்டனர். அத்துடன், தளபதி வில்சனின் உடலைக்கூட கண்டுபிடிக்க முடியாத நிலையும் காணப்பட்டது. இத்தகவல்களை கேள்வியுற்ற டொய்லி கலவரமடைந்து, 'சைமன் சொவேர்ஸ்' என்பவரை பதுளைக்கு அனுப்பினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விஜய்' வாசகனின் தீராத அபிமானம்

## சுயமுயற்சியால் 'விஜய்' யின் பிறந்தநாளைக் கொண்டாடிய வாசகர்





மாணவன் ஏ.றம்ஸான்

விஜய் பத்திரிகை தனது 11 ஆம் ஆண்டில் காலடி வைப்பதை யொட்டி எமது வாசகர் ஒருவர் கிட்டத்தட்ட நான்கைந்து மாதங்களுக்கு முன்னரே வாழ்த்துக்களை அனுப்பிவிட்டார். இது எமக்கே ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது.

வாழ்த்துக்களோடு மாத்திரம் அவர் நின்றுவிடவில்லை. 'விஜய்' யின் பிறந்தநாள் தினத்தன்று அவரே தனது சொந்த ஊரில் தமது அயலவர்களை அழைத்து அங்குள்ள மாணவர்களுக்கு சிறிய விருந்தொன்றை அளித்து அவர்களுக்கென போட்டி நிகழ்ச்சிகளையும் நடாத்தி பரிசில்களையும் வழங்கியுள்ளார். இவை அனைத்தும் தனது சொந்த செலவில் சொந்த ஏற்பாட்டில் அவரே நினைத்து, முன்னின்று செய்துள்ளார்.













"இவ்வாறு 'விஜய்' யின் 11 ஆவது பிறந்தநாளை கொண்டாடப்போகின்றேன். அதற்கு உங்களது அனுமதி வேண்டும் என்று அவர் என்னிடம் கேட்டபோது சற்று சந்தோஷமாகத்தான் இருந்தது. இது சாத்தியப்படுமா என்றும் எண்ணினேன். என்றாலும் பரவாயில்லை ஊக்கப்படுத்து வோம் என்று அனுமதி அளித்தேன். நம்பிக்கை வீண்போகவில்லை. தனது வயதிற்கும், சக்திக்கும் உட்பட்ட அளவில் அவர் கூறியதுபோலவே விஜய்யின் பிறந்தநாளை கொண்டாடியுள் ளார். பரிசில் களையும் வழங்கி சிறுவர் களை ஊக்கப் படுத்தியும் உள்ளார். கிண்ணியா, ஹிஜ்ரா வீதி, இல 91/1 என்ற முகவரியைச் சேர்ந்த ஏ.றம்ஸான் என்ற மாணவனே 'விஜய்' மீது தனது அபிமானத்தை இவ்வாறு காட்டியுள்ளார். தி/கிண்ணியா, அல்-அக்ஸா கல்லூரியில் தரம் 11 இல் இவர் கல்வி கற்கிறார்.

இவரது இந்த அபிமானம் எம்மை புளகாங்கிதம் அடையச் செய்கின்றது. இவர் 'விஜய்' யின் 11 ஆம் ஆண்டை முன்னிட்டு நடத்திய சிறிய கொண்டாட்டத்தையொட்டிய படங்களையும் அனுப்பியுள் ளார். அவையே இங்கு பிரசுரமா கியுள்ளன. இவர் மட்டுமல்ல; இன்னும் ஏராளமான வாசகர்கள் பல்வேறு விதங்களில் 'விஜய்' மீதான தமது அபிமானத்தைக் காட்டி வருவதும் நாம் அறிந்ததே. இவர்களுக்கு பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் சிறந்த உந்துதலை வழங்கி வருகின்றமையும் நன்றிக்குரியதே.

-ஆசிரியர்

# நீங்களும் மெஜிக் செய்யலாம்

## பழச்சாற்றில் ரகசிய தகவலை எழுதுவோம்!



### தேவையான பொருட்கள்:

எலுமிச்சைச் சாறு, சில துளி நீர், வெள்ளைக் காகிதம், Cotton bud ஒன்று.

### 1 ஆவது படிமுறை:



எலுமிச்சைச் சாற்றை எடுத்து அதில் சில துளி நீரை இடுங்கள்.

### 2 ஆவது படிமுறை:




Cotton bud ஐ எடுத்து அதில் எலுமிச்சைச் சாற்றை நனைக்க வேண்டும்.

### 3 ஆவது படிமுறை:



வெள்ளைக் காகிதத்தில் Cotton bud ஐ பயன்படுத்தி நீங்கள் விரும்பிய தகவல் ஒன்றை அதில் எழுதுங்கள்.

### 4 ஆவது படிமுறை:



காகிதத்தை நன்கு உலர விடுங்கள். அப்பொழுது ரகசிய தகவலும் மறைந்துவிடும். இந்த செயற்பாடுகள் நான்கும் முன் ஏற்பாடுகளாகும்.

### 5 ஆவது படிமுறை:



இப்பொழுது வெற்றுக் காகிதமே உங்களுக்குத் தெரியும். இதில் ரகசியத் தகவலை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று பார்வையாளர்களிடம் வினவுங்கள். அவர்களுக்கு சிந்திக்க இடமளியுங்கள் அப்பொழுது அவர்களுக்கு மேலும் ஆர்வம் அதிகரிக்கும்.

### 6 ஆவது படிமுறை:



வெற்றுக் காகிதத்தை அனைவருக்கும் தெரியும் விதத்தில் மின்குமிழுக்கு கீழாக கிடத்த வேண்டும். இதோ மாயாஜால பலத்தால் அந்தக் காகிதத்தில் தகவல்கள் வெளியாகும்.

### ஆலோசனை:

விரும்பினால், எலுமிச்சைசாறில் இளம் நிறங் களில் ஒன்றை சேர்க்க முடியும். இந்த செயற்பாடு களில் புதிய முயற்சிகளை சேர்த்து பரீட்சித்துப் பார்க்கலாம். இவ்வாறு ரகசிய தகவல்க்ள் எழுதப் பட்ட பல காகிதங்களை தயார்ப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். பார்வையாளர்கள் யார் என்று முன்பே அனுமானிக்க முடிந்தால், அவர்களது பெயர்களையும்கூட எழுதலாம். இந்த மாயா ஜால வித்தையை செய்து காட்டும்போது மின் குமிழ் ஒன்று அருகில் இருக்க வேண்டும். மின் குமிழின் ஒளி காகிதத்தில் ஊடுருவும் வகையில் வைக்க வேண்டும். அப்போதுதான் காகிதத்தில் உள்ள ரகசியத் தகவலை அறிந்துகொள்ள முடியும். மேலும் நீங்கள் சற்று ஆக்கபூர்வமாக சிந்தித்தீர்களாயின், இந்த மாயாஜாலத்தினை பலவிதங்களில் நீங்கள் மெருகூட்டலாம்.

மெஜிக் மாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உலகப் புகழ்பெற்ற 7 அதிசயங்களில், சீனாவில் அமைந்துள்ள சீனப் பெருஞ்சுவருக்கு தனித்துவமான முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. தூர கிழக்கு நாடுகளின் குறியீடாக கருதப்படும் இந்த அற்புத படைப்பானது, உலகையே அதிசயிக்க வைத்த மாபெரும் கலைப்படைப்பாகும்.

## உலக மரபுரிமைகளில் ஒன்று

சீனப் பெருஞ்சுவரானது, 1987 ஆம் ஆண்டு முதல் உலக மரபுரிமை தளங்களில் ஒன்றாக யுனெஸ்கோ நிறுவனத்தால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதோடு, இது சீன மக்கள் குடியரசின் தேசிய சின்னமாகவும் கருதப்படுகின்றது.

# உலகை
# சீ





## சீனப் பெருஞ்சுவரின் நிர்மாணம்

சீனப் பெருஞ்சுவரானது, சீன மக்கள் குடியரசின் வட பிராந்திய வலயத்தில் கிழக்கிலிருந்து மேற்காக நீண்டு செல்லும் வகையில் சீனாவின் வட எல்லை முழுவதும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மனிதனால் கட்டப்பட்ட மிகவும் நீளமான சுவர் இதுதான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அதுவும் தொழில்நுட்பம் வளராத காலத்தில் இவ்வாறானதொன்று கட்டப்பட்டது என்பது மிகவும் ஆச்சரியமான விடயமாகும். இப்பெருஞ்சுவரைக் கட்டுவதற்காக கருங்கற்கள், செங்கற்கள், பாறாங்கற்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

கி.மு 7 ஆம் நூற்றாண்டின் முன்னரைக் கால கட்டத்தில் சீனப் பெருஞ்சுவரின் ஆரம்ப கட்டுமானப்பணிகள் இடத்திற்கிடம் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு, இறுதியாக பெருஞ்சுவராக உருவாகியது. சீனாவின் முதலாவது சக்கரவர்த்தியாகக் கருதப்படும் கின் ஷி நங் என்பவரின் ஆட்சிக் காலத்தில், இந்த பெருஞ்சுவரின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர், காலம் செல்லச் செல்ல அழிவடைந்த இச்சுவரானது, மிங் அரச வம்சத்தினரின் ஆட்சிக் காலமாகிய 1368 முதல் 1644 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.









## சீனப் பெருஞ்சுவரின் நீளம்

தொல்லியல் ஆய்வாளர்களின் கணிப்பீட்டின்படி, சீனப் பெருஞ்சுவரின் முழுமையான நீளம் 21,196 கிலோ மீற்றர் (13,171 மைல்) என கணக்கிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு அரச வம்சத்தினாலும் இப்பெருஞ்சுவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப்பணிகள் மற்றும் பெருஞ்சுவருடன் தொடர்புபட்டிருக்கும் இயற்கை மலைத்தொடர்கள் என்பன வற்றை உள்ளடக்கியதாகவே சுவரின் நீளம் கணக்கிடப்பட்டுள்ளது.

## சீனப் பெருஞ்சுவர் கட்டப்பட்டதன் நோக்கம்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சீனாவுக்கு அந்நிய அரசுகளால் பலத்த அச்சுறுத்தல் இருந்தது. திடீரென அந்நியப் படையெடுப்புக்கள் இடம்பெறும். எனவே, இதனைத் தடுப்பதற்காகவும் வேற்றின மக்கள் நாட்டுக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்காகவுமே இச்சுவர் கட்டப்பட்டது. தவிர, நாட்டின் எல்லையாகவும் பிரதான வர்த்தகப் பாதையான பட்டுப்பாதைக்கருகில் வியாபார வரிகளை அறவிடும் இடமாகவும் போக்குவரத்து பாதையாகவும் சீனப் பெருஞ்சுவர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## சீனப் பெரு

அரச வம்சத்தினரின் பாதுகா
கண்காணிப்பு முகாம்களைக்
முகாம்களையும் கொண்டுள்ள
டொன்று செய்திப் பரிமாற்றங்
செய்யப்பட்டுள்ளன. தவிர,
நிறக்கொடிகளை உயர்த்திக் க
பரிமாற்றங்களும் மேற்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பெருஞ்சுவர்

கோடைகாலத்தில் கடும் சூரிய ஒளி வீசும்பொழுது பசுமையான மலைகளுக்கிடையில் நீண்டு செல்லும் சீனப் பெருஞ்சுவரை, சுற்றுலாப் பயணிகள் பெரும் ஆர்வத்துடன் கண்டு களிப்பர். இலையுதிர்காலத்தில் தாவரங்கள் மஞ்சள் மற்றும் செந்நிறமாய் மாறும்பொழுது அந்த வர்ணஜாலங்களுக்கு மத்தியில் சீனப் பெருஞ்சுவர் கண்கொள்ளாக் காட்சியாகத் தோன்றும். பனி படரும் குளிர்காலத்தில் சீனப் பெருஞ்சுவர் மீதும் கண்காணிப்பு முகாம்களின் மீதும் வெண்நிறப் பனிப்படலம் மூடியிருக்கும். இக்காட்சியானது, உள்நாட்டு-வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை பெரிதும் கவரும் விடயமாக அமையும். இதற்கமைய, வருடந்தோறும் பெருந்தொகையான உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சீனப் பெருஞ்சுவரைக் கண்டுகளிக்க வருகை தருகின்றனர். உல்லாசப் பயணிகளுக்கென திறந்து விடப்பட்டுள்ள இடங்களில், பெருஞ்சுவருக்குள் நுழைபவர்கள் அங்கு சுதந்திரமாக நடமாட முடியும்.

# ...யே அதிசயிக்க வைத்த சீனப் பெருஞ்சுவர்









### சீனப் பெருஞ்சுவர் உலகின் மிக நீளமான மயானமா?

சீனப் பெருஞ்சுவரைக் கட்டுவதற்காக பெருந்தொகையான மனித உழைப்பு பயன்படுத்தப்பட்டது. அக்கால சீன மக்களில் வீட்டுக்கு ஒருவராவது சுவர் கட்டும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். நாட்டில் இருந்த சுமார் 70 சதவீத மக்கள் சுவர் கட்டுவதில் தங்களது பங்களிப்பைச் செலுத்தியுள்ளனர். அவர்களில் சிறைக் கைதிகள், அடிமைகள், சாதாரண மக்கள் என பலதரப்பட்டவர்கள் இருந்தனர். பெருஞ்சுவர் கட்டப்படும்பொழுது இடையில் திடீர் விபத்துக்களினாலோ, நோய்களாலோ இறந்தவர்கள் அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டு, நிர்மாணப்பணிகள் நிறுத்தப்படாமல் தொடரப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. எனவே, இப்பெருஞ்சுவரெங்கும் கல்லறைகள் இருப்பதனால், உலகின் மிக நீளமான 'மயான பூமி' என்றும் இது கருதப்படுகின்றது.

### அழிவடையும் ஆபத்தில் சீனப் பெருஞ்சுவர்

சீனப் பெருஞ்சுவரைப் பொறுத்தவரையில், இங்கு உல்லாசப் பயணிகள் அடிக்கடி வருகை தரும் இடங்கள் சிறந்த முறையில் பாதுகாக்கப்பட்டாலும், அதன் வேறு சில பகுதிகள் இயற்கை மற்றும் மனித செயற்பாடுகளால் அழிவடைந்துள்ளன. இயற்கை அனர்த்தங்கள் எனும்போது, மணற்புயல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. குறிப்பாக, சீனாவின் கென்சு மாகாணத்திலேயே இத்தகைய நிலையை பெரும்பாலும் காணலாம்.

-இரஞ்சித் ஜெயகர்



### ...ப் பெருஞ்சுவர் எனும் பாதுகாப்பு அரண்

...ரின் பாதுகாப்பிற்காகக் கட்டப்பட்ட இந்த பெருஞ்சுவரானது, ஆங்காங்கே ...காம்களைக் கொண்டுள்ளதோடு, படையினரை ஒன்று திரட்டி வைக்கக்கூடிய ...கொண்டுள்ளது. அத்தோடு பெருஞ்சுவரின் கண்காணிப்பு முகாம்கள் ஒன்றோ ...ப் பரிமாற்றங்களை செய்துகொள்வதற்கான தொடர்பாடல் வழிமுறைகளும் ...ன. தவிர, தேவையேற்படும் பட்சத்தில் புகை வெளியிடுதல், ... உயர்த்திக் காட்டுதல் போன்ற நடைமுறைகள்மூலம் அவசர செய்திப் ... மேற்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானில் இருந்து வரும் வியப்பூட்டும் தீப்பந்து






**வானில் இருந்து வரும் தீப்பந்து எப்பொழுதும் எமது வியப்புக்குரிய விடயமாகவே இருந்து வந்துள்ளது. இவற்றை 'கடவுளின் ஒளி' என்றே சிலர் கருதுகின்றனர். ஒருசிலர் இவை வேற்றுக்கிரக வாசிகளின் விண் ஓடங்கள் என்றும் கருதுகின்றனர். நூற்றாண்டு காலமாக தீர்க்கப்படாத ஒரு மர்மமாகவே இவ்விடயம் கருதப்பட்டு வந்தது.**

இந்த தீப்பந்து தற்போது வீடியோவாகப் பதிவாகியுள் ளது.சீன ஆய்வாளர்கள் குழு வினருக்கு எதிர்பாராமல் இந்த வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதாவது, மின்னல் தாக்கம் ஏற்படும்போது நிகழும் மிகவும் பிரகாசமான ஒளிப்பந்தே இவ்வாறு வீடியோவில் பதிவாகியுள்ளது. சீனாவின் குவின்ஹய் பகுதியில் புயல் வீசும்போது ஏற்படும் கதிர் வீச்சினை, வரைபுக்கு உட்படுத்தும்போதே இந்த வாய்ப்பு அவர்களுக்கு கிட்டியுள்ளது.

பாரியதொரு மின்னல் தாக்கம் தரையை நோக்கி விழுந்த பின்னர் நிலத்தில் மேலெழும் தீப்பந்து, 50 அடி (15 மீற்றர்) உயரத்திற்கு வானை நோக்கிச் சென்று மறைந்துள்ளது. இந்த பிரகாசமான தீப்பந்து 16 அடி (5 மீற்றர்) அளவுக்கு பெரிதாக தென்பட்டுள்ளதுடன், இரண்டு வினாடிகளுக்கு குறைவான காலப்பகுதி வரை தென்பட்டுள் ளது. சீனாவின் லான்சூவில் உள்ள நோர்த்வெஸ்டர்ன் நோமல் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் சிலரே இது பற்றி அறியத் தருகின்றனர். 2012 ஆம் ஆண்டின் ஒரு தினத்திலேயே இது பற்றிக் கண்டறியப்பட்டுள் ளதுடன், இது தொடர்பான வீடியோ பதிவுகள் அண்மையி லேயே வெளியிடப்பட்டுள் ளன. இவ்வாறான வியப்பூட்டும் தீப்பந்து பற்றி வீடியோ பதிவாக அறியக் கிடைத்த சம்பவம் இதுவே முதல் தடவை என்று, இந்த விடயம் தொடர்பில் பிரசுரித்துள்ள நியூ சயன்டிஸ்ட் சஞ்சிகை குறிப்பிடுகின்றது.

இவ்வாறான பல சம்பவங்கள் குறித்து அண்மைக் காலங்களில் அறியக்கிடைத்துள்ளன. இதனால், கட்டடங்கள் தீக்கிரை யான சம்பவங்களும் மக்கள் இறந்த சம்பவங்களும் பற்றித் தெரியவருகின்றது. இவ்வாறான தோர் அனுபவம் குறித்து 1936 இல் பிரித்தானியாவின் டேலிமெ யில் பத்திரிகைக்கு வாசகர் ஒருவர் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அந்த கட்டுரையில் 'பெரிய சிவப்பு நிற தீப்பந்து ஒன்று வானில் இருந்து விழுந்தது. எமது வீட்டின் அருகில் விழுந்த அந்த பந்து, தொலைபேசி கம்பியினையும் பதம் பார்த்தது. இதனால், ஜன்னல் சட்டங்கள் தீப்பிடித்தன. அதன்பின் கீழே இருந்த நீர் நிரப்பப்பட்ட பாத்தி ரம் ஒன்றில் விழுந்து அணைந்து விட்டது' என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

1960 வரை இந்த தீப்பந்து பற்றி தெளிவான ஒரு முடிவுக்கு விஞ்ஞானிகள் வரவில்லை.



அதன் பின்னர், இவ்வாறான சம்பவம் ஒன்று வெற்றிகரமாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகும். குறித்த தீப்பந்து அவதானிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள மண்ணில் காணப்படும் சிலிக்கன், இரும்பு, கல்சியம் போன்ற கனிமங்கள் இந்த தீப்பந்திலும் உள்ளடங்கியி ருந்ததனை ஆய்வாளர்கள் ஆய்வுக்குட்படுத்திக் கண்டறிந்துள்ளனர்.



இதன்படி, வீடியோவில் பதிவு செய்யப்பட்ட தீப்பந்தானது, நிலத்துடன் ஏற்பட்ட உள்ளகத் தொடர்பினால் ஏற்பட்டதென்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

## 'தீப்பந்து' என்றால் என்ன?

'தீப்பந்து' பற்றி பல நூற்றாண் டுகளாக பல கதைகளை அறியக் கூடியதாக இருந்து வந்துள்ளது. இந்த தீப்பந்து கொல்ஃப் பந்து, அளவிலிருந்து பல மீற்றர் விசாலமான அளவிலும் தோன்றுவதுண்டு. இவ்வாறான கோள வடிவமான தீப்பந்துகள் 1-10 வினாடிகள் வரை காட்சியளிக்கும். இத்த கைய தீப்பந்து ஒன்று உருவாவதற்கான காரண மாக பின்வரும் கருத் தொன்றும் முன்வைக் கப்படுகின்றது. அதாவது, தரைப்பகுதியை நோக்கி மின்னல் தாக்கும்போது, மண்ணில் உள்ள சிலிக்கேட் கனிம வகை களின் ஒரு பகுதி ஆவியா கின்றது. அப்போது மண் ணில் உள்ள காபன் கார ணமாக ஒட்சிசன் சிலிகேட் டில் அடங்கியுள்ள சிலிக் கன் அணுக்கள் பிறப்பிக் கப்பட்டு மிதக்கும் நெனோ துணிக்கைகளாக மாறுகின்றன. பின்னர் அந்த துணிக்கைகள் காற் றில் மிதந்து சென்று ஒட்சி சனுடன் தாக்கம் புரிந்து வெப்பத்தையும் பிரகாச மான ஒளியையும் வெளி யேற்றுகின்றன. இந்த தாக்கம் நிறைவடைந்த தும் அணைந்துவிடுகின் றன. (இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செவிப்புல தொடர்பின் இயல்புகள்

★ தகவல் தொடர்பு வளர்ச்சியில் மிக புராதன கால சமூகத்தில் நிலவிய தொடர்பாடல் வடிவத்துடன் தொடர்புபட்டதாக அமைகின்றது.

★ ஒலி, குரல், சப்தம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு கருத்துப் பரிமாற்றம் இடம்பெறுதல்.

★ செவிப்புல தொடர்பு



நிலைகள் இயல்பாகவும், திட்டமிட்டு தயாரித்தும் முன்னெடுக்கப்படுதல்.

★ பொது ஒழுங்கு தேவைகட்கும், நிர்வாக செயற்பாடுகளுக்காகவும் செவிப்புல தொடர்பு வடிவங்கள் பயன்படுகின்றன.

★ மக்கள் தொடர்பு சாதனம் என்ற அடிப்படையில் குரல், பேச்சு, இசை, வானொலி ஊடகத்தில் பிரதான அம்சங்களாக அமைகின்றன.

★ நவீன ஊடக அணுகுமுறையில் குரல், பேச்சு, இசை என்பன உள்ளடக்கப்பட்டு தொடரறா ஊடகம், பல்லூடக வசதி நிலைகள் அறிமுகமாகியுள்ளன.




★ பேச்சின் ஒலியைக் கொண்டு உணர்வு நிலைகளையும், தனிப்பட்ட ஆளுமைப் பண்பு நிலைகளையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

★ செவிப்புல ஊடகங்கள் ஒலிகள் கொண்டு வரையப்பட்ட சித்திரங்களை முன்வைக்கின்றன.

★ ஒலிப்பாவனையின் தன்மைக்கு ஏற்ப வெவ்வேறு கருத்துக்கள் புலக் காட்சிக்குட்படுத்தப்படுகின்றன.

★ கட்புலனாகாத செய்திகள் செவிப்புல ரீதியில் நுகரப்படுகின்றன.

### செவிப்புல ஊடகங்கள்

**ஆரம்பகால சமூகம்:** கோயில் மணியோசை, குரலோசை, சப்தங்கள், பறவைகள், பிராணிகளின் ஒலிகள், கூக்குரல், வழிபாட்டு முறைகளில் எழுப்பப்படும் சப்தங்கள், பேச்சு,




மேசைமணி, பறையடித்தல், இயற்கை ஒலிகள், வாகன ஒலிகள் (தீயணைப்பு, அம்புலன்ஸ் வாகன ஒலிகள்)

**மக்கள் தொடர்பு சமூகமும் நவீன சமூகமும்:** ஒலிபெருக்கி, ஒலிவாங்கி, வானொலி, ஒலிநாடா, கொழுவும் ஒலிவாங்கி, எஃப்.எம். ஒலிவாங்கி, ஒலி இறுவட்டுக்கள், தொடரறா ஊடகம், பல்லூடகம், இணைய வானொலி.

**தகவல் தொடர்பின் வடிவம்:** தகவல் பரிமாற்ற செயற்பாடானது அன்றாட மனித செயற்பாடுகளிலும், நிறுவனம் ஒன்றின் செயற்பாடுகளிலும், பொதுக் கருமங்களின் செயல் ஒழுங்குகளின்போதும் இடம்பெறுகின்றன. தொடர்பாடல் இடம்பெறுகின்ற நிலைமைகட்கும், சூழ்நிலைகளுக்கு ஏற்பவும் பல்வேறு முறைகட்கு உட்படுவதை அவதானிக்க முடிகின்றது. (தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## தளிர்கரம்

**சரியானதை தெரிவுசெய்து '✓' அடையாளமிடுக**



பொம்மை ☐ வால் ☐ மயில் ☐



கோவில் ☐ பாப்பா ☐ வீடு ☐



புத்தகப்பை ☐ மை ☐ சட்டை ☐

## V மற்றும் v எழுத்துக்களை எழுதுவோம்




**பொருத்தமாக இணைக்க**

| | |
|---|---|
|  | வாள் |
|  | புலி |
|  | பல்லி |
|  | புளி |
|  | பள்ளி |
|  | வால் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் உறவினர்களுக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**නැන්දා:** **ආ.. අක්කේ, එන්න.. එන්න. එන්න දුව.**
ஆ... அக்கே, என்ன... என்ன. என்ன துவ.
மாமி: **ஆ... அக்கா, வாங்க... வாங்க. வாங்க மகள்.**

**අම්මා:** **මල්ලිව බලන්න ආවා නංගි.**
மல்லிவ பலன்ன ஆவா நங்கி.
அம்மா: **தம்பியைப் பார்க்க வந்தோம் தங்கச்சி.**

**දුව:** **මාමා කෝ නැන්දේ?**
மாமா கோ நெந்தே?
மகள்: **மாமா எங்கே மாமி?**

**නැන්දා:** **කාමරයේ ඉන්නවා දුව.**
காமரயே இன்னவா துவ.
மாமி: **அறையில் இருக்கிறார் மகள்.**

**மாமாவின் அறையில்...**

**දුව:** **මාමේ! දැන් කොහොමද?**
மாமே! தென் கொஹொமத?
மகள்: **மாமா! இப்போது எப்படி?**

**මාමා:** **අමාරුවක් නැහැ දුව.**
அமாருவக் நெஹெ துவ.
மாமா: **வருத்தம் ஒன்றும் இல்லை மகள்.**

**අම්මා:** **ඩොක්ටර් මොනවද කිව්වේ?**
டொக்டர் மொனவத கிவ்வே?
அம்மா: **டொக்டர் என்ன சொன்னார்?**

**මාමා:** **ටිකක් පරෙස්සම් වෙන්න කිව්වා.**
டிகக் பரெஸ்ஸம் வென்ன கிவ்வா.
மாமா: **கொஞ்சம் கவனமாக இருக்கச் சொன்னார்.**

**අම්මා:** **ඇහැට දාන්න බෙහෙත් දුන්නද?**
எஹெட்ட தான்ன பெஹெத் துன்னத?
அம்மா: **கண்ணுக்குப் போட மருந்து தந்தாரா?**

**මාමා:** **ඔව්. සතියකට බෙහෙත් තියෙනවා.**
ஒவ். சதியகட்ட பெஹெத் தியெனவா.
மாமா: **ஆம். ஒரு வாரத்திற்கு மருந்து இருக்கிறது.**

**දුව:** **ආයේ ඩොක්ටර් එන්න කිව්වද මාමේ?**
ஆயே டொக்டர் என்ன கிவ்வத மாமே?
மகள்: **டொக்டர் மறுபடியும் வரச் சொன்னாரா மாமா?**

**මාමා:** **ඔව් දුව, බදාදාට එන්න කිව්වා.**
ஒவ் துவ, பதாதாட்ட
என்ன கிவ்வா.
மாமா: **ஆம் மகள், புதன்கிழமை வரச் சொன்னார்.**

**අම්මා:** **පරෙස්සම් වෙන්න මල්ලි. අපි ගිහින් එන්නම්.**
பரெஸ்ஸம் வென்ன மல்லி.
அப்பி கிஹின் என்னம்.
அம்மா: **கவனமாக இருங்கள் தம்பி. நாங்கள் போய் வருகிறோம்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

i. தம்பியைப் பார்க்க வந்தோம்.
..........................................
ii. அறையில் இருக்கிறார்.
..........................................
iii. டொக்டர் என்ன சொன்னார்?
..........................................




**He, She, It** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களுக்குப் (Pronouns) பதிலாக, பெயர்ச்சொற்களை (Nouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட, இறந்தகால தனி வாக்கியம் மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் ஆகிய இரண்டையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) ரங்கன் நேற்று கடைக்குச் சென்றான்.
Rangan went to the shop yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஆ) ரங்கன் தினமும் கடைக்குச் செல்கின்றான்.
Rangan goes to the shop daily.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * Rangan went.<br>ரங்கன் சென்றான். | * Rangan goes.<br>ரங்கன் செல்கின்றான். |

இ) சுமதி நேற்று பாடசாலைக்குச் சென்றாள்.
Sumathi went to school yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஈ) சுமதி பாடசாலைக்கு வார நாட்களில் செல்கின்றாள்.
Sumathi goes to school on week days.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * Sumathi went.<br>சுமதி சென்றாள். | * Sumathi goes.<br>சுமதி செல்கின்றாள். |

உ) உனது சகோதரன் நேற்றுச் சந்தைக்குச் சென்றான்.
Your brother went to the market yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஊ) உனது சகோதரன் தினமும் சந்தைக்குச் செல்கின்றான்.
Your brother goes to the market daily.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * Your brother went.<br>உனது சகோதரன் சென்றான். | * Your brother goes.<br>உனது சகோதரன் செல்கின்றான். |

எ) உனது சகோதரி நேற்று நூலகத்துக்குச் சென்றாள்.
Your sister went to the library yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஏ) உனது சகோதரி தினமும் நூலகத்துக்குச் செல்கின்றாள்.
Your sister goes to the library daily.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)


| | |
|---|---|
| * Your sister went.<br>உனது சகோதரி சென்றாள். | * Your sister goes.<br>உனது சகோதரி செல்கின்றாள். |

ஐ) இந்த நாய் நேற்று தோட்டத்துக்குள் சென்றது.
This dog went into the garden yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஒ இந்த நாய் தினமும் தோட்டத்துக்குள் செல்கின்றது.
This dog goes into the garden daily.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இதோ...! உலகின் உயரமான கட்டடம்

இன்றைய நவீன யுகத்தில் நாளுக்கு நாள் பல புதிய படைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. எல்லையற்ற தொழில்நுட்ப வளர்ச்சியும் புதிய கண்டுபிடிப்புக்களுமே இதற்கான பிரதான காரணிகளாகும். மேலும் ஒவ்வொருவருக்கிடையில் நிலவும் போட்டி மனப்பான்மையும் புதிய விடயங்கள் அறிமுகமாவதற்கான முக்கிய காரணியாகக் கொள்ளலாம்.

தொழில்நுட்ப சாதனங்கள், மின்சாதனங்கள், வாகனங்கள், ஆடை அலங்காரங்கள் என விரிந்து செல்லும் இந்த போட்டித்தன்மையை, கட்டடத்துறையிலும் அவதானிக்கலாம். விசாலமான கட்டடம், அழகான கட்டடம், உயரமான கட்டடம் என கட்டடத் துறையிலும் பல சாதனைகள் நிலைநாட்டப்பட்டு வருகின்றன. அந்தவகையில், மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட உலகின் உயரமான கட்டடங்களின் பட்டியலில் புதிய உறுப்பினராக இணையும் ஒரு கட்டடம் பற்றிப் பார்ப்போம்.

## உயரமான கட்டடமாக பெயர் பதிக்கத் தயாராதல்

விண்ணை முட்டி, முகில்களுக்கு அப்பால் எழுந்து நிற்கும் உலகின் உயரமான கட்டடமாக பெயர் பதிப்பதற்குத் தயாராக உள்ள இந்த கட்டடம், சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதனை 'கிங்டம் டவர்' என்று அழைக்கின்றனர். இக்கட்டடம் 3,280 அடி உயரமாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

இதன் ஆரம்ப கட்ட நிர்மாணப்பணிகள் தற்போதளவில் தொடங்கப்பட்டுள்ளன. இதன் உச்சியில் இருந்து பார்த்தால், செங்கடலும் தென்படும் வகையில், இந்த கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் அத்திவாரத்தினை தரையில் இருந்து 200 மீற்றர் ஆழத்திற்கு இட தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆக, 200 மீற்றர் ஆழத்திற்கு கொங்க்றீட் கலவையைக் கொட்டுவதே இங்குள்ள பிரதான சவாலாகும். அத்துடன், இந்த கொன்க்றீட் அத்திவாரம், செங்கடலின் உவர்நீருக்குத் தாக்குப்பிடிக்கக்கூடியவாறும் நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது.

அண்மையில் வெளியாகியுள்ள தகவல்களின்படி, இந்த பாரிய கட்டட நிர்மாணப்பணிக்கென அரைக் கனமீற்றர் மில்லியன் கொன்க்றீட் தேவைப்படுவதாகவும் சுமார் 80 ஆயிரம் தொன் வரையான இரும்பு தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த கட்டட நிர்மாணப் பணிகளை 'எட்வான்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் டெக்னோலஜி சர்விஸ்' என்ற நிறுவனமே பொறுப்பேற்றுள்ளது. இக்கட்டடம் 167 மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளதோடு, இதற்கான செலவினம் 1.23 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இன்றளவில் உலகின் மிக உயரமான கட்டடமாகக் கருதப்படும் பேர்ஜ் கலீபா கட்டடத்தினைவிட, இது 558 அடி உயரம் கூடியது. பொதுவாக, இவ்வாறான உயரம்கூடிய கட்டட நிர்மாணங்களின்போது எதிர்கொள்ளும் காற்றழுத்த சக்தியைக் குறைப்பதற்கான ஒரு வழிமுறையாக, கூர்மையான தன்மை கொண்ட வடிவமாகவே இந்த கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தின் மிகப்பெரிய சவாலான விடயமாக கொன்க்றீட்டினை பம்ப் செய்யும் செயற்பாடு காணப்படுகின்றது. எனவே, இது குறித்து பொறியியலாளர்களின் கவனம் திரும்பியுள்ளது. அதற்கமைய ஆறு அங்குல குழாயினூடாக கொன்க்றீட்டினை பம்ப் செய்வதென்பது இலகுவான காரியமன்று. எனினும், இவ்வாறான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தியே பேர்ஜ் கலீபா கட்டட நிர்மாணப் பணிகளின்போதும் கொன்க்றீட் பம்ப் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.






## உலகில் தற்போதுள்ள உயரமான கட்டடங்கள் தொடர்பான தகவல்கள் சில...

✱ மனிதனால் நிர்மாணிக்கப்பட்ட உலகின் உயரமான கட்டடமாக டுபாயில் உள்ள 'பேர்ஜ் கலீபா' கட்டடம் கருதப்படுகின்றது. இதன் உயரம் 2,722 அடியாகும். 2010 ஜனவரி 4 ஆம் திகதி இக்கட்டடம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இக்கட்டடம் 163 மாடிகளைக் கொண்டது.

✱ இரண்டாவது உயரமான கட்டடமாக 'தைப்பே 101' கட்டடம் கருதப்படுகின்றது. இதன் உயரம் 1,667 அடியாகும். இது 101 மாடிகளைக் கொண்டது.

✱ மூன்றாவது இடத்தை வகிக்கும் கட்டடமாக ஷங்காய் உலக வர்த்தக கட்டடம் கருதப்படுகின்றது. இதன் உயரம் 1,614 அடியாகும். இங்குள்ள மாடிகளின் எண்ணிக்கை 101.

1960 ஆம் ஆண்டு முதல் கட்டட நிர்மாணப் பணிகளின்போது பொறியியலாளர்கள் கூர்மையான குழாய் வடிவத்தினைப் பயன்படுத்துகின்றனர். இந்த வடிவத்தினை அறிமுகப்படுத்தியவர் பங்களாதேஷ்-அமெரிக்க கட்டட நிர்மாணப் பொறியியலாளரான ஃபௌசுல் ரஹ்மான் கான் என்பவராவார். இந்த முறையினூடாக வினைத்திறனான பலம் வாய்ந்த அதி உயர் கட்டடமொன்றை, குறைந்த செலவில் நிர்மாணிக்க முடியும்.

(-பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அணில்

*தத்தித் தத்தி ஓடும்*
*தாவிக் கிளையில் பாயும்*
*எத்தனையோ கொப்பினிலே*
*ஏறிப் பழத்தை உண்ணும்!*

*பஞ்சு போன்ற மேனி*
*பவளம் போன்ற கோடு*
*அஞ்சி ஏறிக் கிளையில்*
*அமர்ந்திருந்து பார்க்கும்!*

*மரத்திலிருந்து மெல்ல இறங்கி*
*நெல்லைத் தின்னும்*
*துரத்தும் நாயைக் கண்டு*
*தொங்கித் தொங்கி ஓடும்!*

*கள்ளமாக நெல்லும்*
*கனியும் உண்ணும் அணிலே*
*தொல்லை தர மாட்டேன்*
*உன்னைத் துரத்தி விட*
*மாட்டேன்!*

ஜெ.கருஷ்ணா,
கமு/கார்மேல் பற்றிமா தே.பாட.,
கல்முனை.

# வெற்றியின் ரகசியம்



இளைஞன் ஒருவன் அறிஞர் சோக்ரடீஸிடம் வெற்றியின் ரகசியம் என்ன என்று கேட்டான். அதற்கு சோக்ரடீஸ் மறுநாள் அவனை அருகிலுள்ள ஆற்றுக்கு வருமாறு வேண்டினார். மறுநாள் இருவரும் ஆற்றங்கரையில் சந்தித்தனர். சோக்ரடீஸ், இளைஞனிடம் தன்னோடு ஆற்றில் நடக்குமாறு வேண்டினார். இருவரும் ஆற்றில் இறங்கி நடந்தனர். நீரின் அளவு சிறிது சிறிதாக அதிகரித்து அவர்களின் கழுத்தின் அளவிற்கு வந்துவிட்டது. அப்போது சோக்ரடீஸ் இளைஞனை இறுகப் பிடித்து நீரினுள் மூழ்கடித்தார். நீரில் இருந்து வெளிப்பட இளைஞன் எவ்வளவோ முயற்சிசெய்தான். ஆனால், சோக்ரடீஸ் விடவில்லை. அவன் மூர்ச்சை அடையும் நிலையில் அவனை வெளியில் எடுத்தார்.

வெளியில் வந்த, அவன் நன்றாக சுவாசித்தான். அப்போது சோக்ரடீஸ் அவனிடம், "நீ நீருக்குள் இருந்த போது உனக்கு மிக அதிகமாக என்ன தேவைப்பட்டது?" எனக் கேட்டார். அவன் "காற்று" என பதிலளித்தான். உடனே, சோக்ரடீஸ், "அதுதான் வெற்றியின் ரகசியம். இப்போது உன்னிடம் அது இருக்கின்றது. முயற்சித்து முன்னேறு" என்றார். இளைஞன் கரையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

எம்.சாபிர், எம்.சலீம்.




# பொது அறிவு

- ✱ சாகும்வரை வளர்ச்சியடையும் உயிரினங்கள் எவை?
  மீன், முதலை
- ✱ ஞாபகசக்தி அதிகமுள்ள விலங்கு எது?
  வௌவால்
- ✱ மிகச் சிறிய இதயம் உள்ள மிருகம் எது?
  சிங்கம்
- ✱ மண்புழுவிற்கு உள்ள இதயங்களின் எண்ணிக்கை எத்தனை?
  ஐந்து
- ✱ அதிக பற்களுடைய விலங்கு எது?
  நாய்
- ✱ அவுஸ்திரேலியாவில் காணப்படும் பறக்கமுடியாத மிகப் பெரிய பறவை எது?
  எமு

எம்.எம்.நபா,
செட்டியார் வீதி, பாண்டிருப்பு -01.

# பேரீச்சம்பழம்

பேரீச்சம்பழ மரம் எமது நாட்டில் அதிகம் காணப்படுவதில்லை. பாலைவனப் பிரதேசங்களிலேயே அதிகமாக வளரும் இயல்பை இது கொண்டுள்ளது. அந்தவகையில், எகிப்து, அரேபியா, ஆபிரிக்கா நாடுகளில்தான் அதிகமாக காணப்படுகின்றது.

உலகின் பழமையான நாகரிகமான மொசப்பத்தேமியா காலகட்டத்திலேயே பேரீச்சம்பழம் பற்றி கூறப்பட்டுள்ளது. பேரீச்சம்பழம் கடந்த 300 ஆண்டுகளாக உலகெங்கிலும் சத்துணவுப் பழமாக மக்களால் உண்ணப்பட்டு வருகின்றது. இதில் இரும்புச் சத்து, விற்றமின் A, சுண்ணாம்புச் சத்தும் நிறைந்துள்ளது. பேரீச்சம் பழத்தை எந்த நேரத்திலும் சாப்பிட முடியும். இது உடல் வலிமையைப் பெருக்கும். சிறியவர் முதல் பெரியவர் வரை சாப்பிட வேண்டிய அருமையான பழம் பேரீச்சம் பழம்.



ஏ.றிஹானா,
பள்ளி வீதி, செம்மண்ணோடை,
வாழைச்சேனை.

# எமது நாடும் இரத்தினக் கற்களும்

பண்டைய காலம் தொட்டே எமது நாட்டின் இரத்தினக் கற்கள் உலக நாடுகளில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. இதனாலேயே எமது நாட்டிற்கு 'இரத்தின தீபம்' என அந்நியர்கள் பெயரிட்டிருந்தனர்.

இரத்தினக் கற்கள் எமது நாட்டில் இரத்தினபுரி, பலாங்கொடை, ஒக்கம்பிடிய, எலஹர, பஸ்ஸர, படல்கும்புர, லுனுகல போன்ற இடங்களிலேயே அதிகமாகக் கிடைக்கின்றன. இவை பெரும்பாலும் சுரங்கக் குழிகளில் இருந்து கிடைக்கும் 'இல்லம்' எனும் மண்ணில் இருந்து கிடைக்கிறது. இவற்றில் சிவப்பு புஸ்பராகம், ஆறுநூல் போன்றவை விலை பெறுமதி மிக்கவை. மேலும், மிக மிக அரிதாகக் கிடைக்கக்கூடிய கற்களும் உள்ளன.





மாணிக்கத்தை வெட்டி ஒப்பமிட்டு (பட்டை தீட்டப்பட்டு) விற்பனைக்கு விடப்படுகின்றது. ஏனையவை பட்டை தீட்டப்படாமலேயே விற்பனை ஆவதும் உண்டு. அத்துடன், பதுளை, இரத்தினபுரி போன்ற இடங்களில் அனேகமான மக்கள் தமது ஜீவனோபாய தொழிலாக மாணிக்கக் கல் அகழ்வை மேற்கொண்டுள்ளனர். மேலும், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய தொழிலாக இரத்தினக் கல் வியாபாரம் காணப்படுகின்றது.

எம்.எம்.எஃப்.சுமைய்யா,
அ/இக்கிரிகொள்ளாவ மு.ம.வித்.,
அனுராதபுரம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 30.04.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

நடராஜ் அறிவுக்கு விருந்து - 21
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

**பரிசுப் பொதி**
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## 1

அருகிலுள்ள சொற்களை இங்குள்ள எழுத்துக் கூட்டத்திற்குள் இனங்கண்டு நிறந்தீட்டுக.

clean
earth
april
litter
paper




plastic
pollution
recycle
reduce
reuse

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| e | w | h | a | t | h | p | a | p | r | n | o |
| a | s | u | m | b | p | i | r | l | v | c | l |
| r | e | c | y | c | l | e | c | a | z | p | a |
| t | a | a | p | r | i | l | e | s | d | o | g |
| h | g | j | u | e | v | b | e | t | a | l | s |
| s | b | n | z | d | w | y | h | l | o | l | n |
| o | r | y | e | u | r | f | s | c | j | u | k |
| p | m | o | t | c | e | r | h | t | e | t | c |
| a | c | u | r | e | u | s | e | r | w | i | l |
| p | s | v | u | e | n | m | c | r | p | o | e |
| e | h | e | s | y | w | q | b | j | d | n | a |
| r | t | t | k | g | l | i | t | t | e | r | n |

## 3


**உரிய நிழற்படத்துடன் இணைக்க**





## 2

**படத்திற்குப் பொருத்தமான சொல்லில் '✓' அடையாளமிடுக**




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 19 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 02**




**போட்டி: 03**

1)
2)



## நடராஜ் அறிவுக்கு விருந்து - 19 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1ஆம் பரிசு**
*பாபு பவித்ரா, கண்டி.*

**2ஆம் பரிசு**
*எஃப்.ரும்ஸா, வெலிகம.*


**3ஆம் பரிசு**
*ஜெ.யதுமித், கல்முனை-02.*

**பாராட்டுப் பெறுவோர்:**

- எல்.சங்கவி, கல்முனை.
- எம்.இல்முடீன், மருதானை.
- சி.சஷிந்திரன், தலவாக்கலை.
- எஃப்.அஸீமா, பாணந்துறை.
- எம்.ஹபீஸ், மடவளை பஸார்.
- மு.மகேஸ், கொழும்பு-13.
- எஃப்.லீனா, மாத்தளை.
- வி.பிருந்தா, பதுளை.
- என்.அர்விந்த், பம்பலப்பிட்டி.
- எஸ்.முபீனா, பொல்கஹவளை.

Sponsored by
NATARAJ®
Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

## குறுக்கெழுத்துப் போட்டி இல.82



**மேலிருந்து கீழ்**

01. கால எல்லை முடிவடைதல்.
02. வெயிலின்போதும் மழையின்போதும் தேவைப்படும்.
04. புளிப்புச் சுவையுடைய கறி வகைகள் சமைக்க உதவும்.
05. தர்மம்.
06. ஆதிகால மனிதனின் வசிப்பிடங்களில் ஒன்று.
08. இராவணனின் தங்கை. (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. கோயில் உண்டியலில் செலுத்தப்படுவது.
03. மீன்பிடிக்கத் தேவைப்படும்.
05. சமையலின்போது பாத்திரத்தை இதில் வைத்துத்தான் உணவு சமைக்க வேண்டும். (மாறியுள்ளது)
06. மார்கழி மாதத்தில் இது அதிகம்.
07. கோணத்தை அளக்கப் பயன்படும் அலகு.
08. கற்பூரம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.81 விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கா | ய் | ச் | 2 ச | ல் | |
| சி | 3 கா | | ர் | ட | 4 அ |
| னி | | 5 கு | க் | 6 க | ல் |
| | று | ளி | 7 க | | வா |
| | ற் | | ரை | 8 கூ | |
| சி | 9 நா | | | னி | 10 ப |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோ.சுடர்மகள்,
கிளிநொச்சி இந்து அ.பாட.,
கிளிநொச்சி.




அ.வர்சன்,
யா/நெல்லியடி மத்திய கல்.,
நெல்லியடி.



ஹொரம்பாவையைச் சேர்ந்த ஹஸ்னி-பிர்தவ்சியா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் பஹட், தனது ஏழாவது பிறந்தநாளை 18.04.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பாத்திமா சப்ரா)



உகுரஸ்ஸபிடியைச் சேர்ந்த முஹம்மட் பவ்மி-ஜெமிலா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் சதாம், தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை 18.04.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: மும்தாஜ் காதர்)






நற்பிட்டிமுனை-01, இ.மி.சபை வீதியைச் சேர்ந்த பரமநாதன் கிருதன், தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளை 17.04.2014 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவனின் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பா.பரமநாதன்)



உக்குவளை, மாபேரியை சேர்ந்த ஹசீம்-நிஸ்ரா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா சல்மா, தனது நான்காவது பிறந்தநாளை 16.04.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பாத்திமா நிஸ்ரா)



கிளிநொச்சி-வட்டக்கச்சியைச் சேர்ந்த லிங்கமூர்த்தி-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வி சங்கிசை, தனது ஏழாவது பிறந்தநாளை 13.04.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: வி.துவாரகா)



கொழும்பு கிராண்ட்பாஸைச் சேர்ந்த ஜோசப்-எமல்டா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஸ்டெப்பான், தனது பிறந்தநாளை 05.04.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இயேசுவின் ஆசி பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



கே.சந்தோஸ்,
சென்.அன்தனிஸ் ஆ.கல்.,
கொழும்பு-13.



பு.கேதாரன்,
உவர்மலை விவேகானந்தாக் கல்.,
உவர்மலை.



ஜெ.ஜெயகாந்,
புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வித்., திருகோணமலை.



ஜெ.ஹிபா,
செய்னப் மு.பெ.ஆ.பாட.,
புத்தளம்.



எம்.குஸ்தி,
மேர்சி கல்வி வளாகம்,
மதுராங்குளி.

எஃப்.சிஹாரா,
பலகொல்ல தெல்தெனிய மு.வித்.,
பலகொல்ல.





எம்.றோஸன் அக்தார்,
யதாமா பாட., மல்வானை.



இ.ஜீவா, கல்முனை.



ரி.அப்துல்லாஹ்,
க/தெனு/அரபா மு.ம.வித்.,
தவுலகல.



எஃப்.சாகிரா,
மா/தேவஹுவ மு.ம.வித்.,
தலேவெல.

# நாணயம்



தண்டனைகளில் இருந்து தப்பிக்க பொய் கூறுவதும் நாணயமான- நேர்மையான செயற்பாடுகளில் இருந்து விலகுவதும் அந்த வேளைகளில் அனுகூலமாகத் தெரியலாம். ஆனால், காலம் செல்லச் செல்ல மிகத் தீமையான விளைவுகளையே இது ஏற்படுத்தி விடுகின்றது. கல்விப் பயிற்சிகள் தொடர்பாக நேர்மை இன்மையை அல்லது பொய் கூறுதலை மேற்கொள்ளும் எந்த ஒரு மாணவனும் எதிர்காலத்தில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களில் தீங்கிழைக்கும் ஆபத்துக்களில் சிக்கிக்கொள்கின்றான்.

இதனால், மாணவர்கள் தொடர்பாகவும் தொழில் நடவடிக்கைகளிலும் நாணயம்-நேர்மை மற்றும் விசுவாசம் என்பன மிக முக்கியமான விடயமாகவே கருதப்படுகின்றது. பொதுவாக பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்கள் பொய்கூறுதல் மற்றும் நேர்மையின்மையை மிக இலகுவாகவே கண்டறிந்துவிடுகின்றனர். இத்தகைய மாணவர்களை சரியான அறிவுறுத்தல்கள், கண்டிப்பின் மூலம் திருத்தியமைக்க முடியும். அதேவேளை, உண்மை அல்லது நாணயமான நடைமுறைகளைப் பின்பற்ற நினைக்கும் மாணவன் ஒருவன் மிகச் சிறப்பான மனச்சாட்சியும் உண்மையான நேர்மையான நண்பர்களின் தொடர்பாடல்களையும் கொண்டவனாக இருப்பான்.



இவை ஆரோக்கியமான கற்றல்முறை மற்றும் குடும்ப சூழ்நிலைகளினால் ஏற்படுகின்றது. நாணயமான, பக்குவமான வாழ்க்கை முறைகள் என்பனவும் இதற்கு மேலும் வலுச் சேர்க்கின்றன. கற்றல் நடவடிக்கைகளின்போது பாடதிட்டத்திற்கு அமைவாக செயற்படும் அதேவேளை, நேர்மை, பொய் கூறாதிருத்தல் பெரியோரை மதித்தல், புறங்கூறாத் தன்மை, வாழ்வின் தத்துவங்களை விளங்குதல் என்பனவும் ஒரு மாணவனின் நல்வாழ்வுக்கும் கற்றல் சிறப்புக்கும் வழிகாட்டியாக அமையும் என்பதே யதார்த்தமான நிலையாக உள்ளது. ஆகவே, மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளின் ஊடாக நாணயமான, பண்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவது மிகவும் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்

### ப்ரெட்ரிக் பென்டிங் மற்றும் சார்ள்ஸ் பெஸ்ட் (Frederick Banting & Charles Best)

1921-கெனடா




இன்சுலின்

### எஃப்.எச்.பேர்னட் பிஸ்கட் நிறுவனம் (F.H.Bennett Biscuit)

1908 - நியூயோர்க்





நாய்க்கான பிஸ்கட்

### மெலிட்டா பென்ட்ஸ் (Melitta Bentz)

1908 ஜேர்மனி




கோப்பி வடிகட்டி

### அந்தனி ப்ளேஹ்னர் (Anthony Blahner)


1518 - ஜேர்மனி



தீயணைப்பு வாகனம்

### கெய்ல் போர்டன் (Gail Borden)

1853 - நியூயோர்க்





கெட்டிப்படுத்தப்பட்ட பால்

### ஹம்ஃப்ரி டேவி (Humphry Davy)

1815 - பிரித்தானியா




சுரங்கப் பாதுகாப்பு விளக்கு

# உயிரியல் வகைப்பாடு

## அஸ்ட்ரன்டியா மெஜர்



இதன் பொதுவான பெயர் Masterwort ஆகும். மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவை பூர்வீகமாகக் கொண்ட கெரட் குடும்பத்தின் பூக்கும் தாவரங்களின் ஓரினமே அஸ்ட்ரன்டியா மெஜராகும். இது மருந்திற்குப் பயன்படக்கூடிய குட்டைச் செடியாகவும் உள்ளது. இதன் சிறிய பூக்கள் பச்சை கலந்த வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்திலும் பெரிய பூக்கள் சிவப்பு, இளஞ்சிவப்பு நிறங்களிலும் காணப் படுகின்றன. இந்தப் பூக்கள் வருடத்தின் ஜூன் முதல் செப்டெம்பர் மாதம் வரையில் பூக்கின்றன. புதர்த் தாவரமாகிய இந்த பூச் செடி படர்ந்து வளரக் கூடியதுடன், அலங்காரச் செடியாகவும் வளர்க்கப் படுகின்றது.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Asterids* |
| வரிசை | : *Apiales* |
| குடும்பம் | : *Apiaceae* |
| பேரினம் | : *Astrantia* |
| இனம் | : *A.major* |

## காற்சட்டைப் பூ



கிழக்கு மற்றும் வட அமெரிக்க காடுகளில் வளரக் கூடிய வற்றாத குட்டைச் செடிப் பூவே 'காற்சட்டைப்' பூவாகும். இதன் பொதுவான பெயர் Dutchman's breeches. இந்தப் பூ பார்ப்பதற்கு காற்சட்டையைப் போன்று தோற்றமளிப்பதனால் காற்சட்டைப் பூ என்று அழைக் கப்படுகின்றது. இந்தப் பூக்கள் 1-2 செ.மீற்றர் வரை யான நீளம் கொண்டது. வெள்ளை மற்றும் மஞ்சள் நிறம் கலந்ததுபோன்று இவை பூக்கின்றன. படர்ந்து வளரக்கூடிய இச்செடியின் காம்பு ஒன்றில் பல பூக்கள் பூக்கின்றன. இதன் விதைகள் எறும்புகள் மூலம் காவிச் செல்லப்பட்டு வேறு இடங்களுக்கு பரவுகின்றன. இந்த மலர்கள் மருந்திற்கும் பயன்படு கின்றன.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| வரிசை | : *Ranunculales* |
| குடும்பம் | : *Papaveraceae* |
| பேரினம் | : *Dicentra* |
| இனம் | : *D.cucallaria* |

## ஸ்ட்ரோபரி ப்ளைட்



வட அமெரிக்கா, கெனடா முழுவதிலும் காணப்படும் இப் பூவினம் ஐரோப்பா மற்றும் நியூஸிலாந்துப் பகுதிகளிலும் காணப்படுகின்றது. இந்த ஸ்ட்ரோபரி ப்ளைட் மலர்கள் ஸ்ட்ரோபரி பழத்தைப் போன்று அடர்ந்த சிவப்பு நிறத்தில் காய், காயாகப் பூக்கின்றன. இந்தப் பூக்க ளில் இருந்து சாறு எடுக்கப்பட்டு அதில் ஒருவகைச் சாயமும் தயாரிக்கப்படுகின்றது. இந்தப் பூக்கள் பெரும்பாலும் ஈரமான மலைப் பள்ளத்தாக்குகளி லேயே அதிகமாகக் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : கோர் இருவித்திலைத் தாவரம் |
| வரிசை | : *Caryophyllales* |
| குடும்பம் | : *Amaranthaceae* |
| பேரினம் | : *Blitum* |
| இனம் | : *B.Capitatum* |

## பெலிஸ் பெரனிஸ்



*Asteraceae* குடும்பத்தின் டெய்சி இனத்தின் ஒரு வகையே பெலிஸ் பெரனிஸ் மலராகும். இதன் பூர்வீகம் ஐரோப்பா. தரையில் படர்ந்து வளரக்கூடிய புதர்ச்செடி இனமான பெலிஸ் பெரினிஸ் சிவப்பு, வெள்ளை, மெரூன், இளஞ்சிவப்பு போன்ற பல நிறங்களில் அடர்ந்து பூக்கக்கூடியது. இதுவோர் அலங்காரச் செடியாகவும் வீடுகளில் தொட்டிகளில் வைத்து வளர்க்கப்படு கின்றது. இந்தச் செடி கிழங்குகள் மூலமே பெருக்க மடைகின்றன. இதனை 'புல்வெளி டெய்சி' என்றும் பொதுவாக அழைப்பர். இதில் மருந்திற் காகப் பயன்படக்கூடிய ஒரு இனமும் உள்ளது.

| | |
|---|---|
| ராச்சியம் | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Asterids* |
| வரிசை | : *Asterales* |
| குடும்பம் | : *Asteraceae* |
| பேரினம் | : *Bellis* |
| இனம் | : *B.Perennis* |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் சாரணர் உலகம்




# பேடன் பவல் மற்றும் குடும்பத்தினரின் அரிய வகை புகைப்படங்கள்





திருமணத்தின்போது, தம்பதிகளாக தம்மை வெளிப் படுத்தி நிற்கும் பேடன் பவல் மற்றும் அவரது துணை வியார் சீமாட்டி பேடன் பவல் அவர்களுடன் சாரணர்கள் பரிசளித்த கார்.

# சாரணர் ஆலோசனை

*சாரணனாக இணைந்தால், கிடைக்கும் விருதுகள் பற்றி....*



நீங்கள் முதலில் சாரணனாக இணைந்து சர்வதேச அமைப்பு ஒன்றில் உறுப்பினராவதே மாபெரும் வெற்றியாகும். அதுதான் முதலில் கிடைக்கும் உயர்ந்த விருது. மேலும், இதில் நீங்கள் பெற இருக்கும் நன்மைகளை அல்லது பெற்றிருக்கும் தகுதியை உங்களுக்கும் சமூகத்திற்கும் அடையாளப்படுத்துவதே இந்த விருதுகள் மற்றும் சின்னங்கள் ஆகும். முதலில் சாரணராக இணைய விருப்பம் உள்ளவர்கள் பாடசாலைகளிலோ அல்லது திறந்த குழுவிலோ இணைந்ததன் பின்



பயிற்சி பெற்று அங்கத்துவ சின்னம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனைத் தொடர்ந்து சாரணர் விருதினை பெற்றுக் கொள்ள முடியும். தொடர்ந்து மாவட்ட ஆணையாளர் விருது அல்லது மாவட்ட ஆணையாளர் நாட கிடைக்கும். இதன்போது, மேலும் பயிற்சிகள் வலுவானதாக இருக்கும். இதன்பின்னர் பிரதம ஆணையாளர் விருது கிடைக்கும். அதன்போது வினைத்திறன் அலங்கார நாட கிடைக்கும். இதனை நீங்களாகவே பின்னிக்கொள்ள வேண்டும். பின்னர், உங்கள் சீருடை யில் அணியமுடியும். இதனுடன், தொடர்ந்து சாரணர் பயிற்சிகளுடன் சமூக சேவை இவற்றின் திறன்களை முன்னேற்றப்பட்டு நேர்முகத் தேர்வுகளின் பின்னர் ஜனாதிபதி சாரணர் விருது கிடைக்கும். ஒருவர் தனது 11 வயது தொடக்கம் 18 வயது வரையான காலத்திலேயே இவற்றினை பெற்றுக்கொள்ள முடியும். ஒருவர் சாரணராக இணைந்தால், அவர் ஒரு ஜனாதிபதி சாரணனாகத்தான் வர வேண்டும். அப்போதுதான் பெறுமதிமிக்க சாரணர் வாழ்க்கையின் அர்த்தங்களை புரிந்துகொள்ள முடியும்.

(அறிவுரை தொடரும்...)

**அடுத்த வாரம் வருவது...**

சாரணர்கள் ஏன் நடைப்பிர யாணம் மேற்கொள்கிறார்கள்?



இலங்கை சாரணர் சங்கத்தின் தேசிய தலைமைக் காரியாலயத்தில் கடமை யாற்றும் ஆணையாளர்கள் பயன்படுத்துகின்ற அங்கீகரிக்கப்பட்ட கழுத்துப்பட்டி. இதனை வேறு யாரும் அணிதல் கூடாது.

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)


01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| கொலம்பியா | 11,118 | 1933 | 1917 |


(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

## சாரணர் முகாம் தேவைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்றிலுள்ள கரியமில வாயுவைக் குறைக்க புதிய கருவி

தற்கால உலகில் அதிகரித்து வரும் கரியமில வாயுவின் (Carbon Dioxide) அளவு மற்றும் புவி வெப்பமடைதலைக் குறைக்க செயற்கை ஒளிக் கற்றை (lazer) முறையில் சீரமைக்கும் கருவி ஒன்று Panasonic நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது. இம்முறை மூலம் மேற்கொள்ளப்படும் ஒளிக்கற்றை செயற்பாட்டின்போது, காற்றில் கலந்துள்ள கரியமில வாயு உள்ளீர்க்கப்படுவது மட்டுமன்றி, அதன் விளைவாக ஒட்சிசன் மற்றும் எதனோல் போன்றவை வெளியாகின்றன. இதனூடாக சுற்றுச்சூழலில் உள்ள கரியமில வாயுவின் அளவு குறைவடைவதுடன், புவி வெப்பமடையும் விகிதமும் குறைவடையலாம் என்று Panasonic நிறுவனம் தெரிவிக்கின்றது.

# இமாலயத்தில் இளஞ்சிவப்பு நிற உப்பு



200 மில்லியன் ஆண்டுகள் பழமையான இளஞ்சிவப்பு நிற உப்பு இமயமலைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்று இமயமலை உள்ள பகுதியில், பண்டைய காலத்தில் லாவாக்களால் மூடப்பட்ட உப்பளம் இருந்துள்ளது. இவை மனித தலையீடுகள் இன்றி பல ஆண்டுகள் பனியால் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இங்கு கிடைக்கப்பெற்றுள்ள இந்த இளஞ்சிவப்பு நிற உப்புக் கட்டிகள் பூமியில் கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் சுத்தமான உப்பு என்று பலரும் கருதுகின்றனர். மேலும், இந்த உப்பில் மனித உடலில் அடங்கியுள்ள நுண் கனிமங்கள் மற்றும் 84 மூலப் பொருட்கள் அடங்கியுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

சோடியம் க்ளோரைட், சல்பேற், கல்சியம், பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் என்பன சில உதாரணங்களாகும். இந்த இளஞ்சிவப்பு நிற உப்பானது, அதிர்வினை உறிஞ்சும் ஆற்றலைக் கொண்டுள்ளதுடன், மனிதர்களின் ஆரோக்கியத்திற்கும் உதவக் கூடியது என்றும் நம்பப்படுகின்றது

# வியப்பான உப்பு விளக்கு





பெரியதோர் உப்புக்கல் ஒன்றில் துளையிட்டு அதன் உட்பகுதியில் இளம் நிறமொன்றைப் பூசி அனல் ஒளி குமிழை அதனுள் பொருத்துவதனூடாக இந்த விளக்கு ஒளிர்கின்றது. இதுவே 'உப்புக்கல் விளக்கு' என்று அழைக்கப்படுகின்றது. இந்த உப்பு விளக்கு சிறந்த பிரகாசத்தை தருகின்றது, ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் அகழ்ந்து எடுக்கப்படும் உப்புக் கற்களினால் தயாரிக்கப்படும் இந்த விளக்குகளுக்கு அலங்கார தொழிற்துறையில் அதிக கேள்வி காணப்படுகின்றது. (இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையின் உயரமான பகுதியில் அமைந்துள்ள 'ஹோட்டன் சமவெளி'



இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 'ஹோட்டன் சமவெளி', சுமார் 3,160 ஹெக்டயர் பரப்பளவில் பரந்து காணப்படும் அழகு மிகுந்த ஒரு பிரதேசமாகும். உயிர்ப்பல்வகைமைத் தன்மையும் தொல்லியல் முக்கியத்துவமும் கொண்ட தேசிய வன விலங்கியல் பூங்காவாகவும் இது கருதப்படுகின்றது. இலங்கையின் ஈர வலயத்தில் அமைந்துள்ள ஒரேயொரு தேசிய வனவிலங்கியல் பூங்காவான ஹோட்டன் சமவெளியானது, ஆரம்பத்தில் 'மஹாஎலிய' என்றே அழைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மிக உயரமான சமவெளியாகவும் இது கருதப்படுகின்றது. அதாவது, கடல் மட்டத்தில் இருந்து 1200-2300 மீற்றர் உயரத்தில் மலையகப் பகுதியிலேயே இந்த சமவெளி அமைந்துள்ளது. சூழல் ஆர்வலர்கள் பலரும் இந்த சமவெளியை பலவாறாக விளக்கியுள்ளனர். எல்.சி.குக் (1930) என்பவர் இந்த வனத்தை 'தாழ் புல்வெளி' என்ற வகைப்பாட்டினுள் சேர்த்துள்ளார். செம்பியன் (1936) என்பவர் 'மலைசார் வனாந்தரம், என்று இதனைக் குறிப்பிட்டுள்ளதுடன், செப்டன் (1947) என்பவர் 'ஈரவலய பசுமைக் காடு' என்றும் ஹோட்டன் சமவெளியைக் குறிப்பிட்டுள்ளார்.

1920 களில் ஆங்கிலேயரான கெப்டன் வில்லியம் ஃபிஷர், கேர்ணல் அல்பட் வொட்சன் ஆகிய இருவருமே முதன்முதலில் ஹோட்டன் சமவெளியைக் கண்டுபிடித்தனர். எனினும், இந்த சமவெளிக்கு 'ஹோட்டன் சமவெளி' என்ற பெயர் ஆளுநர் சேர். வில்மட் ஹோட்டனின் வருகையின் பின்னரே சூட்டப்பட்டது. 1969 ஆம் ஆண்டிலிருந்து இந்த வனப்பகுதி 'இயற்கை வனப்பகுதி' யாகப் பிரகடனப்படுத்தப்பட்டதோடு, 1988 ஆம் ஆண்டில் தேசிய வனவிலங்கியல் பூங்காவாகவும் அறிவிக்கப்பட்டது.

மகாவலி, களனி, வளவே ஆகிய நதிகள் ஹோட்டன் சமவெளிப் பகுதியிலிருந்தே ஊற்றெடுக்கின்றன. இப்பகுதியில் திடீரென பனி மூட்டம் சூழ்ந்துவிடுகின்றது. பின்னர் சிறிது நேரத்தில் பனி மூட்டம் கலைந்து, பிரதேசம் தெளிவாகிவிடுகின்றது. இதனால், ஹோட்டன் சமவெளியை 'முகில் வனாந்தரம்' என்றும் அழைப்பர்.

இங்கு 101 தாவர இனங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவற்றுள் 49 இனங்கள் இலங்கைக்கு மட்டும் உரித்தானவையாகும். அதிலும் பெரும்பாலானவை ஹோட்டன் சமவெளிக்கு மட்டுமே உரித்தானவையாகும். ஹோட்டன் சமவெளியில் ஒரு ஹெக்டயரில் உள்ள தாவரங்களின் எண்ணிக்கை 2,861 ஆகும். இங்கு 98 பறவை இனங்களும் 14 பாலூட்டி இனங்களும் 16-20 வரையான ஈருடக வாழ் இனங்களும் 40 வகையான வண்ணத்துப்பூச்சிகளும் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளன.

(இ)




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 23, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org